முத்திரை

(கார் காலம் 2023)

(தமிழ் இணைய இதழ்)



(தனிச்சுற்றுக்கு மட்டும்)

Shakespeare's Desk

பேரிகை முழக்கம்

ஏன் இந்த இதழ் வெளிவருகிறது ? 

கப்பல் மாலுமியின் கையில் இருக்கும் காந்த ஊசி, வடக்கு திசையையே காட்டிக் கொண்டிருக்கும். நமது மாநிலத்தில் உள்ள தமிழ்ப் படைப்பாளிகள், தங்கள் படைப்புகளை, பத்திரிகை வெளியீட்டு நிறுவனங்கள் நிறைந்த சென்னைக்கு அனுப்பி விட்டு, தங்கள் படைப்புகள் வருமா, வராதா என்று ஆவலோடு இமைகள் மூடாமல், வடக்கு திசையையே நோக்கி விழிகளை வைத்திருக்கிறார்கள்.

என்னுடைய படைப்புகளை சென்னை பட்டணத்து பத்திரிகை ஆசிரியர்கள் நிராகரித்த போது, எனக்குள் எழுந்த ஆவேச ரௌத்திரம் தான் இந்த "முத்திரை" இதழ். நமது தென் மாவட்டங்களில் ஆகச்சிறந்த படைப்பாளிகள் இல்லையா ? அவர்களின் எழுத்துக்களில் வீரியமும், உண்மையும், அழகும் இல்லையா ? அச்சு இயந்திரத்தை கையில் வைத்துக் கொண்டு, தமிழையே ஆட்டிப் படைக்க ஒரு சிலர் எண்ணுவதா ? "வலியோர் சிலர் எளியோர் தமை வதையே புரிகுவதா ?" என்ற ஆவேசம் எனக்கும் எழுந்தது. அதன் விளைவே இந்த இணைய இதழ். என் சகோதரர் புனல்வேலி ஆல. தமிழ்ப்பித்தனிடம் ஆலோசனை கேட்டேன். "ஆகா, உடனடியா செய்யலாம் சார்!" என்று ஒப்புதல் தந்தார். தம்பி புனல்வேலி ஆல. தமிழ்ப்பித்தனுக்கு நன்றி..!

ஒரு ஆண்டுக்கு நான்கு இதழ்கள் வெளியிடலாம் என்று திட்டமிட்டுள்ளோம். அகிம்சையை மாத்திரம் நாடும் எங்கள் உள்ளம், அதற்கு மேல் தமிழ் வாசகர்களைத் துன்பப்படுத்த எண்ணாது. எழுத்துலகின் பிரம்மாக்களே! எடுங்கள் உங்கள் எழுதுகோலை ! படைப்புகள் சிருஷ்டி செய்யப்படட்டும். தரமான படைப்புகள் வெளியிடப்படும்.

ஸ்ரீவில்லிபுத்தூர் எஸ். ரமேஷ்,
ஆசிரியர்,



படைப்புகளை அனுப்புவோர் கவனிக்க :

என்ன வேண்டுமானாலும் எழுதுங்கள். உங்கள் படைப்புகளின் வாயிலாக , எந்த அளவு எங்களை இம்சை செய்தாலும், சகித்துக்கொள்ள எங்கள் ஆசிரியர் குழு தயார் என்று பகிரங்கமாக அறிவிக்கிறோம்.

கதை, கட்டுரை, கவிதை, விமர்சனம், புத்தகம் குறித்த அறிமுகம் என்று எது வேண்டுமானாலும் எழுதி, வாசகர்களை சித்திரவதை செய்ய தங்களுக்கு முழு உரிமை உண்டு. எல்லாப் பழியையும் ஆசிரியர் என்ற ஒரு பிரஹஸ்பதி ஏற்றுக் கொள்ளுவார். தயவு செய்து, தமிழ் மொழியில் மாத்திரம் படைப்புகளை அனுப்பவும். ஸ்பானிஷ், பிரெஞ்சு, இலத்தீன், சீன, மற்றும் ஜப்பானிய மொழிகளில் படைப்புகளை அனுப்புவதைத் தவிர்க்கவும். அந்த மொழிகளெல்லாம் எமது ஆசிரியர் குழுவுக்குத் தெரியாது.

தங்கள் படைப்புகளைத் தாளில் எழுதி அனுப்ப வேண்டாம். எந்தப் படைப்பானாலும், அதைக் கணினியில் **MS-Word "ஒருங்குறி - லதா"அல்லது "ஒருங்குறி - நிர்மலா"(Unicode - Latha or Unicode – Nirmala)** என்ற எழுத்து வடிவில் தட்டச்சு செய்து, **90805 51905 / 87542 24076** வாட்சப் எண்களுக்கு அனுப்பவும்.

படைப்புகளை எழுதி அனுப்பும் போது, பிழைகளை நீக்கி, நீங்களே இரண்டு தடவை சரி பார்த்து அனுப்பவும். ஒற்றெழுத்துக்களை வேண்டிய இடத்தில் சேர்த்துச் சந்திப்பிழை, இல்லாமல் அனுப்பவும். ஒவ்வொரு வாக்கியத்திலும், நிறுத்தற்குறி, அரைப்புள்ளி, காற்புள்ளி போன்றவைகளை நீங்களே இட்டுச் சரி செய்யவும். வார்த்தைக்கு வார்த்தை

இடைவெளி விட வேண்டும். நான்கு பக்கங்களுக்கு மேல் உங்கள் படைப்பு போக வேண்டாம். மின்னஞ்சல் : **rameshzillion@hotmail.com**

தயவு செய்து பிடிஎஃப் (pdf) வடிவில் படைப்புகளை அனுப்ப வேண்டாம்.

சிறந்த படைப்புகள், ஒவ்வொன்றுக்கும் ரூ. 10,000 (ரூபாய் பத்தாயிரம்) சன்மானமாகத் தரலாம் என்ற எண்ணமும் எங்களுக்கு உண்டு. கம்ப்யூட்டர் உலகின் சக்கரவர்த்தி அண்ணன் பில் கேட்ஸ் அவர்களுக்கு ஒரு மின்னஞ்சல் போட்டு, அவரிடம் நிதி உதவி கோரியிருக்கிறோம். அவர் வாரித் தந்தால்,, படைப்பாளிகளுக்கு கண்டிப்பாக சன்மானம் உண்டு.

ஒரு முக்கிய விஷயம் :
உலகின் எந்த மூலையிலும் தமிழ் பேசக்கூடியவர்கள் இந்த இதழுக்கு படைப்புகள் அனுப்பலாம். பாரத், இலங்கை, பர்மா, மலேசியா, சிங்கப்பூர், மற்றும் கோபால் பல்பொடி எங்கெல்லாம் விற்பனையாகிறதோ, அங்கிருந்தெல்லாம் படைப்பாளர்கள் எமக்கு எழுதி அனுப்பலாம்.

Muththirai **(Kaar kalam) issue , 2023. [meant for private circulation only.]**

தொடர்புக்கு :

ஆசிரியர்
ஷேக்ஸ்பியர்ஸ் டெஸ்க்
எண் **33** தெற்கு ரத வீதி
ஸ்ரீவில்லிபுத்தூர் அ. கு. **626 125**
விருதுநகர் மாவட்டம்.

அலை பேசி : (வாட்சப்) **90805 51905 / 87542 24076**

மின்னஞ்சல் : **rameshzillion@hotmail.com**

என் கடந்த 10 ஆண்டு கால இலக்கிய வாழ்வில்,

என் நெறியாளுநராக இயங்கி வந்த

அன்புக்குரிய ஐயா சா. தேவதாஸ் அவர்களுக்கு

இந்த இதழ், அன்பின் சமர்ப்பணம்.

ஆசிரியன் பேசுகிறேன்....! 

வணக்கம். வந்தனம். இந்த “முத்திரை” (கார் காலம்) முதல் இதழின் வாயிலாக தங்களுடன் உரையாட, உறவாட வந்துள்ளோம். இது இணைய இதழ். இதை அச்சிட்டுக் கொண்டு வரலாம் என்று எண்ணினோம். இன்று உள்ள அச்சுத் தொழில் நுட்பத்தில், அதற்கான செலவுகளை எங்களால் சந்திக்க முடியாது என்பது எமது துணிபு.

இளமைப் பருவத்திலிருந்து அடியேன் அடைந்த வளர்ச்சியை, என் வாசிப்பின் அடுக்கடுக்கான வளர்ச்சியின் மூலமாகச் சொல்லி விடலாம். பள்ளி செல்லும் வயதில், பாலர் இலக்கிய இதழ்களான "பால மித்ரா", "ரத்னபாலா", "கோகுலம்" போன்ற சிறுவர் இலக்கியங்களைத் தீவிரமாக வாசித்துக்கொண்டிருந்தேன். பிறகு, மற்ற எல்லோரையும் போல, வர்த்தக இதழ்களான “குமுதம்”, “தேவி”, “ஆனந்த விகடன்” ஆகியவற்றை வாசித்தேன். “சாவி”, “ஞான பூமி”, “இதயம் பேசுகிறது”, என்று பலப்பல ரகங்கள். எல்லாம் என் மொழி அறிவுக்கு உதவின என்று தான் சொல்ல வேண்டும். என்னுடைய வேதனை என்னவென்றால், நான் சிறு வயதில் வாசித்த அநேக பத்திரிக்கைகள் இப்போது வெளிவரவில்லை. அவை நின்று விட்டன.

பிறகு, கல்லூரிப் பருவத்தில் பாலகுமாரனை வாசிக்க ஆரம்பித்தேன். அவரது நூறு நாவல்களையாவது வாசித்திருப்பேன். ஜெயகாந்தன், பட்டுக்கோட்டை பிரபாகர், சுஜாதா, ராஜேஷ் குமார், ராஜேந்திர குமார், சாண்டில்யன், கோவி. மணிசேகரன், புதுமைப்பித்தன், மௌனி, கி. ரா. ஸ்ரீவேணுகோபாலன் (புஷ்பா தங்கதுரை), நீல. பத்மநாபன், சுந்தர. ராமசாமி, ஜெயமோகன், எஸ். ராமகிருஷ்ணன், என்று ஒருவரையும் விடவில்லை. எனக்கு மொழியோடு தொடர் பரிச்சயமும், அந்நியோன்யமும் ஏற்பட இவை உதவின.

முன்னாளில் பொழுதுபோக்கு என்பதில் வாசிப்பது என்பது பிரதானமான ஒன்றாக இருந்தது. திரைப்பட அரங்குக்குப் போவது உண்டு. ஆனால், பல நடுத்தரக் குடும்பங்களில், திரைப்படங்கள் ஒழுக்கக் கேட்டை போதிக்கின்றன என்ற கருத்தை அந்நாளைய முதியவர்கள் வலியுறுத்தினார்கள். என்னை நூலகத்திற்குச்சென்று வாசிக்கச் சொல்லி, எனது அப்பா வழி நடத்தியது இன்னமும் என் ஞாபகத்தில் இருக்கிறது. விருதுநகரில், நான் வசித்த அந்தத் தெரு முனையில், ரயில்வே ஸ்டேஷன் அருகே இருந்த பொது நூலகத்தில் மணிக்கணக்கில் நான் வாசித்திருக்கிறேன்.

பின்னாளில், வீட்டுக்கு வீடு தொலைக்காட்சி வந்தது. கேபிள் ஒளிபரப்பு வந்தது. 24 X 7, என அல்லும் பகலும் அனவரதமும், தொலைக்காட்சிகளில் திரைப்படங்கள் ஒளிபரப்பாகின. நெடுந்தொடர்கள், மாதர்களின் நெடிய நேரத்தைப் போக்க உதவின. வீட்டோடு இருக்கும்

நடுத்தர வர்க்கப் பெண்கள், தொலைக்காட்சி நெடுந்தொடர்களில் ஆழ்ந்து கிடக்க ஆரம்பித்தனர். வாசிப்பு என்பது மிகவும் சுருங்கியது. நான் வாசித்த இலக்கிய இதழ்கள், சிற்றிதழ்கள் எல்லாமே இந்த மின்னணு உலகின் அசுர நெருக்கடியில் சிதைந்து, காணாமல் போயின. கால ஓட்டத்தில், சனங்களின் வாசிப்பு முறைகள் மாறியதும் இன்னொரு காரணம்.

ஒரு பிரபல நாளிதழின் பிரதி ஒன்றை ஒரு வாரத்துக்கு, எங்கள் வீட்டில், நாங்கள் கேட்காமலே போட்டு விட்டுப் போனார்கள். ஒரு வாரத்துக்கு மட்டும். எனக்கு ஆச்சரியம். ஒரு வாரத்துக்குப் பிறகு, அந்த நாளிதழின் விற்பனை நிர்வாகி எனது வீட்டுக்கு வந்தார். "எங்க பத்திரிக்கைக்கு சந்தா வாங்கிக்கங்க" என்றார். எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. இந்திய முழுக்கப் பிரபலமான ஒரு நாளிதழின் தமிழ்ப் பதிப்பு, விற்பனையில் தள்ளாடிக் கொண்டிருக்கிறது.

தரமான இலக்கிய இதழ்கள், விற்பனையில் நொண்டியடிக்க ஆரம்பித்து, மூடு விழா கண்டன. "கல்கி" வார இதழ் மூடப்பட்டது மிகப்பெரும் துயரம். சிறுவர் இதழ்களும் விற்பனையின்றி மூடப்பட்டன. ஒவ்வொரு கைபேசி விற்கும் போதும், அது பத்து பருவ இதழ்களின் விற்பனையை அபகரித்துக் கொள்கிறது. இலக்கிய இதழ்களுக்கு இது கஷ்ட காலம். பருவ இதழ்கள் எனப்படும் அச்சு இலக்கியங்கள் எல்லாமே விஞ்ஞான வளர்ச்சியால் நொறுங்கிக் கொண்டிருக்கின்றன. இந்த "முத்திரை" இதழ் ஏன் கணினி இதழாக வெளி வருகிறது என்பதற்கான காரணத்தைத் தங்களிடம் விளக்கி விட்டேன்.

மேலும், இது இணைய தளங்களின் காலம். மின்னணு சாதனங்கள் உலகையே ஆண்டு கொண்டிருக்கின்றன. புதிதாக வந்துள்ள செயற்கை நுண்ணறிவு (AI - Artificial Intelligence) என்ற தொழில் நுட்பம் எட்டுக்கால் பாய்ச்சலில், அசுர வேகத்தில், அனைத்துத் துறைகளிலும் வந்து கொண்டிருக்கிறது.

காலத்துக்குத் தக்கதாக நம்மை நாமே தகுதிப்படுத்திக் கொள்ளாமல் இருப்பது சரியோ? இது கணினி யுகம். குடிமைப் பொருள் வாங்கப் பயன்படும் ரேஷன் அட்டை கூட கணினி அட்டையாகி விட்டது. ஒரு தேசத்தின் ஒட்டு மொத்த குடிமக்களின் தகவல்களை ஒருங்கே திரட்டி, அதை ஒரு கணினியில் ஏற்றி, UI -ஆதார் அட்டை என்று ஒவ்வொரு குடிமகனுக்கும் வழங்கி விட்டார்கள். காகிதமில்லா அரசாங்கம் நடந்து கொண்டிருக்கிறது. புது டில்லியில் இருக்கும் பாரத பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் ஒரு ஒட்டு மொத்த தேசத்தையே கணினி வாயிலாக நிர்வகித்துக் கொண்டிருக்கிறார்.

"பழையன கழிதலும், புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே."

என்ற மூதுரைக்கு இணங்க, அச்சுத் தொழில் நுட்பத்துக்கு ஒரு பெரிய வணக்கம் போட்டு விட்டு, கணினியின் வாயிலாகத் தங்களுடன் இலக்கிய உரையாடல் நிகழ்த்த வந்துள்ளோம். இந்த இதழின் படைப்புகளை வாசித்து விட்டு எமக்கு எழுதுக.

இந்த இதழை வாசிக்க இருக்கும் இலங்கைத் தமிழ் மக்கள், மற்றும் புலம் பெயர்ந்த தமிழர்கள், புலம் பெயர வழியில்லாத தமிழர்கள், புலம் பெயர வழி தேடிக் கொண்டிருக்கும் தமிழர்கள், அயல் நாடுகளில் வாழும் தமிழர்கள் எவராயினும், தங்கள் படைப்புகளை எமக்கு அனுப்பலாம். அவைகளை இரு கரம் விரித்து வரவேற்கிறோம்.

நிறைய சிந்திப்போம். நிறைய பேசுவோம். நிறைய எழுதுவோம்.

தமிழ் வளர்ப்போம்...!

என்றும் அன்புடன்,

ஸ்ரீவில்லிபுத்தூர் எஸ். ரமேஷ்.

மின்னஞ்சல்...: **rameshzillion@hotmail.com**

muththiraimagazine@gmail.com

வாட்சப் : + 90805 51905

உள்ளே ......

உலகின் ஆதி காலத்தில் வாழ்ந்த விமானி
இலங்கை மன்னன் இராவணன்

-- ஸ்ரீவில்லிபுத்தூர் எஸ். ரமேஷ்

Brave King Ravana of Lanka, of Ramayana - fame, was an air pilot and a civil aviation expert in the epic times.

5,000 ஆண்டுகளுக்கு முன்பு, சிறிலங்காவின் இராவண மன்னன் உலகின் முதல் விமானப் போக்குவரத்தை முறையாக துவங்கி வைத்து, தானே அதில் பறந்தான். இலங்கை அரசாங்கத்தின் சிவில் விமானப் போக்குவரத்து ஆணையம், இப்போது பண்டைய காலங்களில் பறக்க அவன் பயன்படுத்திய வழிமுறைகளைப் புரிந்து கொள்ள ஒரு முயற்சியைத் தொடங்கியுள்ளது.



இராவணன் விமானப் போக்குவரத்து தொழில் நுட்பத்தின் முன்னோடி என்பதையும், விமானத்தைப் பயன்படுத்தி முதன் முதலில் பறந்தவன் என்பதும் மறுக்க முடியாத உண்மைகள்.

இராவண மன்னன் ஒரு மேதை. அவன் தான் முதலில் விமானத்தில் பறந்தான். அவன் ஒரு விமானியாக இருந்தான். இது புராணம் அல்ல. இது ஒரு உண்மை. இது குறித்து விரிவான ஆராய்ச்சி செய்யப்பட வேண்டும்.

5,000 ஆண்டுகளுக்கு முன்பு, இராவணன் இலங்கையிலிருந்து, இந்தியாவுக்கு பறந்து, வந்தான். இராமரின் மனைவி சீதையை கடத்திச் சென்றான். எனவே, உலகின் ஆதி காலத்தில் வாழ்ந்த விமானி இலங்கை மன்னன் இராவணனே!

இலங்கையில், பலர், இராவணன் ஒரு நல்ல ராஜா, அறிஞர் என்று நம்புகிறார்கள். சில இந்திய வசனங்கள் கூட அவரை "மகா பிராமணர்" என்று வர்ணிக்கின்றன. இராவணன் வேதம் ஓதுவதில்

வல்லவன். நான்கு வேதங்களில் ஒன்றான சாம வேதத்தை இசையுடன் ஓதி, அதன் மூலம் சிவபெருமானையே மயக்கிய அவன் ஒரு அந்தணன் என்பது நம்மில் எத்தனை பேருக்கு தெரியும் ?



கம்பனின் "இராமாவதாரத்திலும்" விமானம் குறித்த அறிவியல் தொழில்நுட்ப செய்திகளைக்காண்கிறோம். இது நம்மை பெரிதும் ஆச்சரியப்பட வைக்கிறது. இராமன், காவிய நாயகன் (Protagonist). இராவணன், காவியத்தின் எதிர்நிலை ஆளுமை (counterforce). அவன், வானில் விமானத்தில் பறக்கும் தொழில்நுட்பத்தைப்பயன்படுத்தியிருந்திருக்கிறான்.

ஏங்குவாள் தனிமையும், இறகு இழந்தவன்
ஆங்குறு நிலைமையும், அரக்கன் நோக்கினான்;
வாங்கினன், தேரிடை வைத்த மண்ணொடும்,
வீங்கு தோள்மீக் கொடு, விண்ணின் ஏகினான். 50

விண்ணிடை வெய்யவன் ஏகும் வேகத்தால்,
கண்ணொடு மனம் அவை சுழன்ற கற்பினாள்,
உள் நிறை உணர்வு அழிந்து ஒன்றும் ஓர்ந்திலள்;
மண்ணிடை, தன்னையும் மறந்து, சாம்பினாள். 51

--- ஆரண்ய காண்டம்-- சடாயு உயிர் நீத்த படலம்

இலங்கை வேந்தன் இராவணன், சீதா தேவியை, கபட சந்நியாசி வேடத்தில் அணுகி, அவளிடம் நைச்சியமாகப்பேசி, அவளை பர்ணசாலையோடு பெயர்த்தெடுத்துக்கொண்டு, கடத்திக்கொண்டு, வானில் பறக்கிறான். அப்போது, வழியில், ஜடாயு என்பவன் இராவணனை வழி மறித்து, சீதையை மீட்பதற்காக, அவனோடு போர் புரிகிறான். போரில், ஜடாயுவை கொன்ற இராவணன், மீண்டும் வானில் வேகமாகப்பறக்கிறான் என்று கம்பர் பாடுகிறார். இந்த இடத்தில முக்கியமான விஷயம்

என்னவென்றால், வானில் பறப்பது" என்பது தான். அந்நாளிலே, விமானங்கள் புழக்கத்தில் இருந்துள்ளன. இராவணன் , சானகியை கடத்திச்செல்லப்பயன்படுத்தியது, ஒரு விமானமே.

மீண்டும், அதே காண்டத்தில் இன்னொரு இடத்தில், இந்த விமானம் எத்தகைய தொழில்நுட்பத்தில் இயங்கியது என்பதையும், கம்பர் கோடிட்டுக்காட்டுகிறார். அதாவது, விமானம் என்றால் அதற்கு உடல், இறக்கை, மற்றும் சக்கரங்கள் இருக்க வேண்டும். இராவணன், சீதையை கடத்தப்பயன்படுத்திய விமானத்தின் சக்கரங்கள், தரையில் சிறிது தூரம் ஓடிய பிறகு, வானில் எழும்பிப்பறந்திருக்கிறது என்ற கருத்தை அவர் தெரியப்படுத்துகிறார்.

ஒரு விமானம், முதலில் தரையில் சிறிது தூரம் ஓடும். அதன் பின்னே, அது மெதுவாக மேலே எழும்பும். இதையே, "எழும்புதல்" (Takeoff) என்பார்கள்.

'தேரின் ஆழியும் தெரிந்தனம்; தீண்டுதல் அஞ்சிப்
பாரினோடு கொண்டு அகழ்ந்ததும் பார்த்தனம், பயன் இன்று
ஒரும் தன்மை ஈது என் என்பது, உரன் இலாதவர்போல்;
தூரம் போதல்முன் தொடர்தும்' என்று, இளையவன் தொழலும். 76

'ஆம்; அதே இனி அமைவது' என்று, அமலனும், மெய்யில்
தாம வார் கணைப் புட்டிலும் முதலிய தாங்கி,
வாம மால் வரை மரன் இவை மடிதர, வயவர்
பூமிமேல் அவன் தேர் சென்ற நெடு நெறி போனார். 77

மண்ணின்மேல் அவன் தேர் சென்ற சுவடு எலாம் மாய்ந்து,
விண்ணின் ஓங்கியது ஒரு நிலை;

-- ஆரண்ய காண்டம் -- சடாயு உயிர் நீத்த படலம்

“மண்ணின்மேல் அவன் தேர் சென்ற சுவடு எலாம் மாய்ந்து,
விண்ணின் ஓங்கியது ஒரு நிலை ”

என்ற வரிகளைப்பாருங்கள். அதில், ஒரு விமானம், தரையில் சில தூரம் ஓடிய பின், மேலே வானில் எழுவதைப்பற்றி விவரிக்கப்பட்டிருக்கும். விமான தொழில்நுட்பத்தின் எல்லைகள், அந்நாளிலேயே எட்டப்பட்டிருக்கின்றன.

தார் ரோடு


-- இரா.கதைப்பித்தன்



சினிமாவில் நடிக்கப் போன
சிதம்பரம் அண்ணன் பற்றி
சேதி ஒன்றும் இது வரை
மாதக்கணக்கில் தெரியாததால்,
சின்னத்தம்பி சிங்காரம்
சென்னைக்குக் கிளம்பிச் சென்றான்
நுங்கம்பாக்கம், கோடம்பாக்கம்,
வளசரவாக்கம், விருகம்பாக்கம்,
வடபழனி என்று வரிசையாக,
தெருக்கள் வழியே தேடிச் செல்கையில்,
தா ர்ரோடு போடும் வேலையில்
சாலையின் நடுவே நிற்பது அண்ணனா?!
'அண்ணே!' என்று சத்தத்துடன்
சின்னத்தம்பி சாலையின் குறுக்கே ஓட,
"ஏய்! யாரப்பா ? பிடிங்க அவனை !
குரல் கேட்டு திரும்பும் போது,
ஓடி வந்த இருவர் பிடித்து,
ஓரமாய் நிறுத்திய போது,
அருகில் வந்த அண்ணன்
"என்னப்பா இப்படி பண்ணிட்டே !?
சினிமா ஷீட்டிங் நடக்குதில்லே !
படம் பேரு தார் ரோடு !

பொங்கலுக்கு வெளியாகுது.
அதோ பார், என்ஜின் டிரைவரா
அண்ணன் விஜய் சேதுபதி,
மாரி செல்வராஜ் டைரக்ஷன்.
அப்புறம் வந்து பேசறேன்."
ஆனந்தம் கொப்பளிக்க,
அப்பாவுக்கு வாட்ஸ் அப்பில்,
இப்படி மெசேஜ் போட்டான்.
"தார் ரோடு பொங்கலுக்கு வருது!
அண்ணனை அதிலே பார்க்கலாம்!"
கப்பி ரோட்டில் நடந்தபடி,
கிராமத்தில் அதைப் படித்த அப்பாவுக்கு,
தலையும் புரியவில்லை ! வாலும் புரியவில்லை.


-----X-----



நூல் விமர்சனத்துக்காக புத்தகங்களை அனுப்பும் போது, நூல் ஆசிரியரின் சுய வாழ்க்கைக் குறிப்புடன், இரண்டு பிரதிகளை எமது ஸ்ரீவில்லிபுத்தூர் 'முத்திரை' அலுவலக முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

பேசும் புத்தகங்கள்

-- புனல்வேலி தமிழ்ப்பித்தன்



ஓ, மானிட வர்க்கமே !
ஒரே ஒரு முறை
உன் செவி திறந்து
உரைக்கும் என்
உரை கேள்.
வாயில்லை எனக்கு.
ஆயினும் நான் பேசுவேன்.
காலில்லை எனக்கு
ஆனாலும் நான்
கால் வலிக்க நடப்பேன்.
உயிரில்லை எனக்கு.
ஆனாலும்,
உயிரற்ற உங்களுக்கு
உயிரூட்டுவேன்.
என்னைத் தொழுது வா
வேண்டிய வரம் தருவேன்.

என்னை நீ
உதாரணம் காட்டினால்
உயர்த்துவேன்.
உதாசீனம் ஆக்கினால்,
உதிர்ப்பேன்.
மகனாவதும்,
மகானாவதும் என்னை
பயன்படுத்துவதில்
நதிகளை உட்கொண்டதால்,

நாலா பக்கமும்
நான் மழையாய்,
நீயும் கடலைப்போல்.
என்னை உட்கொள்.
எட்டு திசையிலும்
கருத்து மழை பொழிவாய்.
என்னை
வாசித்துப் பார்க்குமுன்
யோசித்துப்பார்
மழலைப் பருவத்தில்
மண்-அவனாய் இருந்த உன்னை,
மாணவனாக்கி,
மன்னவனாக்கினேன்.

நீ
நோயாளியாய்ப் படுக்கையில்
நொந்து போய்க் கிடக்கையில்,
போராளியாக்கினேன்.
ஏமாளியாய்,
கோமாளியாய் இருந்த உன்னை,
ராசாளியாக்கினேன்.

என்
ஒரு பக்கத்தைப் புரட்டு.
உன்
மறுபக்கத்தை
நான் புரட்டுவேன்,
வெறும் மனிதனாயிருந்த உன்னை
பெரும் கவிஞனாக்குவேன்,
உன் நாக்கில் நானிருக்க,
என் போக்கில் நீயிரு.
நீங்கள் குடியிருந்தால்
தாயகம்.
நாங்கள் குடியிருந்தால்
நூலகம்.
மாணவனாய் என்னிடம் வா.
ஆசிரியனாக்குவேன்
வாசிப்பாளனாய் வா.
வையத்தில் நிரந்தர

வசிப்பாளனாக்குவேன்.
கரித்துண்டாக வா.
கற்பூரமாக்குவேன்.
காகிதமாய் வா.
காவியமாக்குவேன்.

மானிடனே,
மறந்து விடாதே 1
என்னைப் படிக்க நேரம் ஒதுக்கு.
சிதையல்ல நீ.
விதையெனக் காட்டுவேன்
என்னை நீ
புத்தகமாகப் பிரசவித்தாய்.
உன்னை நான்
புதையலாக பிரசவிப்பேன் !

****

ஆ. மு. சீனியம்மாள் நினைவாக
புனல்வேலி தமிழ்ப்பித்தன்

எழுத்தாளருடன் ஒரு நேர்காணல்
இந்த இதழில் : சா. தேவதாஸ்.



(சம காலத்தில் தமிழ் இலக்கிய வெளியில், மொழிபெயர்ப்புத்துறையில் தொடர்ந்து, தீவிரமாக இயங்கிக்கொண்டிருப்பவர் சா. தேவதாஸ் அவர்கள். 2014 - ம் ஆண்டில், தமிழ் மொழிபெயர்ப்புக்கான சாகித்திய அக்காதெமி விருதை வென்றவர். தான் மட்டும் எழுதாது, பிறரையும் இந்த மொழிபெயர்ப்புத் துறைக்கு கொண்டு வர எண்ணுபவர். எழுத்துத் துறையில் இருக்கும் இளைஞர்களுக்கு ஆதர்ச வழிகாட்டி என அவரைக் கொள்ளலாம். "முத்திரை" இதழுக்காக அவரைப் பேட்டி கண்டோம்.)

ஆசிரியர் : மொழியாக்கத்தின் முக்கியத்துவம் என்ன ? ஏன் இலக்கியங்களை மொழியாக்கம் செய்ய வேண்டும் ?

சா. தேவதாஸ் : ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் நடைமுறையிலுள்ள சூழலில், தொடர்புறுத்தவே மொழிபெயர்ப்பு தேவையாகிறது. 24 மொழிகள் புழங்கும் இந்தியா போன்ற தேசங்களில் இதன் தேவை இன்னும் அதிகமாகிறது. பல மொழிகள் எனும் போது, பல பண்பாடுகள், மரபுகள், நாகரீகங்கள். இவற்றை இன்னொரு மொழி பேசுபவன் புரிந்து கொள்ள மொழிபெயர்ப்பு அவசியம். ஏனெனில், வாழ்க்கை குறித்த பார்வை, பண்பாடு தோறும் வேறுபடுகிறது. இந்த மாறுபாடுகளும் வேறுபாடுகளும், பரிச்சயமாகும் போது, சமுதாயங்களுக்கிடையே மோதலும் போட்டியும் குறைந்து, சக வாழ்வுக்கான

சாத்தியம் அதிகரிக்கும். கால்வினோ எனும் மாபெரும் புனைவெழுத்தாளர், “மொழியாக்கம் இல்லையெனில் எனது நாட்டின் எல்லைகளுக்குள்ளே கட்டுண்டு இருந்திருப்பேன். மொழிபெயர்ப்பாளர் எனது சகா. அவர் எனக்கு உலகை அறிமுகம் செய்து வைக்கிறார்" என்கிறார்.

ஆசிரியர் : எல்லா இலக்கியப் படைப்புகளையும் மொழியாக்கம் செய்ய இயலுமா ? அப்படி செய்ய முடியாதென்றால் அதற்கு என்ன காரணம் ?

சா. தே. : முடியாது. சட்டென்று நினைவுக்கு வருபவர் கோணங்கி. கோணங்கியை மொழிபெயர்க்கையில் அவரது மொழியும், எடுத்துரைப்பும் பெரும் சவால்களாகி விடுகின்றன. அவர் மொழியையும், எடுத்துரைப்யையும் தர்க்க ரீதியில், காரண – காரியப் பொருத்தப்பாட்டுடன் மேற்கொள்வதில்லை. உரைநடையில் அவர் எழுதினாலும், அது கவிதையின் தளத்தில் இயங்குகிறது. குறிப்பிட்ட கதை, சம்பவங்களின் தொடர்ச்சி, பாத்திரங்களின் பங்கேற்பின்றி, நவீன ஓவியம் போல கோடுகளால் உள்ளது. (அ) வண்ணங்கள் நிரம்பியதாய் இருக்கிறது. வார்த்தை ரீதியிலான புரிதலுக்கு இடமில்லாது போய் விடுகிறது.

சூக்கும விவரிப்பில் அறிவுத்தளத்தில் பங்கேற்பு இல்லை. மேலும், பொதுவான அடையாளங்களையும் குறிப்புணர்த்தல்களையும் கைவிட்டு, தனக்கேயான அடையாளங்களை / குறியீடுகளைப் பயன்படுத்துகிறார். ஒட்டு மொத்த உயிரியால் அணுகுபவனே கோணங்கியின் பிரதியில் நுழைய முடியும். அதற்கு எழுத்தாளனின் அளவுக்கு வாசகனும் தேடல் மிகுந்திருக்க வேண்டும்.

ஜெர்மன் மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட *The Death of Virgil* இன்னொரு உதாரணம். கவிஞர் விர்ஜில் இறப்பதற்கு 72 மணி நேரம் இருக்கையில், அவருக்கும் , அகஸ்டஸ் மன்னனுக்குமிடையிலான முரண்கள் / போட்டிகளுக்கிடையே, கவிஞரின் நனவோட்டங்களாக, நாவலை நகர்த்திச் செல்ல முற்படுகிறார் ஹெர்மன் ப்ரோக். ஆனால் நகர்வதில்லை. பம்பரம் ஒரு மையத்தில் சுழன்று கொண்டே இருப்பது போல, தியானத்தில் ஆழ்ந்தது போல, வாக்கிய பேதம், பக்க நீட்சி என எந்தப் பிரக்ஞையுமின்றி நீண்டு கொண்டே போகின்றன. வாக்கியங்களும், பத்திகளும், பக்கங்களும், மொழிபெயர்க்க நான்கு ஆண்டுகள் ஆகியுள்ளது அண்டர்மெயர் எனும் கவிஞருக்கு.

ஆசிரியர் : ஒரு மொழியாக்கத்தின் போது அந்தப் படைப்பின் மூலத்தில் உள்ள கலாச்சார, மொழி, இன, தேசியப் பின்புலத்தை நழுவ விட்டு விடுகிறோம். இது சரியான

கூற்றா ? இது சரியெனில், இதற்கு மொழிபெயர்ப்பாளர் செய்ய வேண்டிய சரிக்கட்டும் பணி என்ன ?

சா. தே. : படைப்பின் மூலத்தில் உள்ள கலாச்சார, மொழி, இன, தேசியப் பின்புலத்தை நழுவ விட்டு, மேற்கொள்ளப்படுவது மொழிபெயர்ப்பே இல்லை. கலாச்சார, இன, தேசியப் பின்புலத்தை அறியத்தான் மொழிபெயர்ப்பு தேவை. அது செய்தி / தகவலாக நின்று போகக்கூடாது. உருது மொழிக்கவிதையை / கஸல் போன்ற வடிவத்தை, மிர்ஸா காலிப் போன்றவர்களின் கவிதையை, ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பது சிரமமானது தான். அது குறிப்பிட்ட கவிஞரின் வார்த்தை விளையாட்டு சார்ந்தும், பிற மொழியில் மேற்கொள்ள முடியாத செய்யுளின் யாப்பு, கவிதை வரியின் இறுதியில் இடம் பெரும் ஒத்திசைவு சார்ந்தும் ; பல்பொருள் உணர்த்தும் தன்மை சார்ந்தும். இதை முழுதாக, தன் ஆங்கில மொழிபெயர்ப்பில் கொண்டு வர, ஒரு கவிதைக்கு இரண்டல்லது மூன்று மொழிபெயர்ப்புகளைத் தந்து விடுகிறார் சாஹித் ஆலம். ஓரிடத்தில் அய்ந்து மொழியாக்கங்களுக்கும் சாத்தியம் இருப்பதை எடுத்துக் காட்டுகிறார்.

இது பொறுமையுடன் நிறைவேற்ற வேண்டிய சிரமமான பணி. அதில் ஈடுபட முடிகின்றவன் அற்புதம் நிகழ்த்தி விட்டது போல ஆனந்தமடைவான்.

"எழுத்து, மொழியின் எலும்புகளை நொறுக்குவது போன்றது என ஓரான் பாமுக் குறிப்பிட்டால், மொழியாக்கம் அவற்றை மறுசீரமைப்பது ஆகும். அது எப்போதும் நிறைவேறாது. அப்படி நிறைவேறுகையில், அது கடல்களையும், கண்டங்களையும் தாண்டிச்செல்லும் " (மினி கிருஷ்ணன்)

ஆசிரியர் : "மூல நூல் என்பது உயிருள்ள மீன். மொழியாக்கம் என்பது அதன் கருவாடு" என்று கூறுகிறார் முனைவர் நாச்சியப்பன். இது சரியான கூற்றா? அவ்வாறெனில், ஒரு மொழிபெயர்ப்பாளர் எந்த ஸ்திதியில் நிற்கிறார் ?

சா. தே. : மீன்- கருவாடு என்று உவமையே அருவருப்பாக உள்ளது. மொழிபெயர்ப்பை சாரமற்றது என்ற பொருளில் பயன்படுத்துகிறார் நாச்சியப்பன். கிரிகோரி ரபஸ்ஸா மற்றும் எடித் கிராஸ்மன் ஆகியோர் மேற்கொண்ட ஆங்கில மொழிபெயர்ப்புகள், தனது ஸ்பானிஷ் அசலை விடச் சிறந்தவை என்றார் மார்க்யுஸ். நாச்சியப்பனுக்கு நேர் எதிரானது இது. இது விதிவிலக்கு தான். விதியாகக் கொண்டு விட முடியாது என்னும் கவனத்துடன் சொல்கிறேன். மொழியாக்கத்தை 90 % -95% சாதித்து விட்டாலே பெரிய விஷயம். இந்த 10 % - 5 % குறைவால் அது சாரமற்றதாகி விடாது தானே .

வெவ்வேறு இலக்கணங்கள் கொண்ட இரு மொழிகள், தட்ப வெப்பம், உணவு முறையிலிருந்து வாழ்க்கைப் பார்வைகள் வரை வேறுபடும் கலாச்சாரங்கள் - இவற்றிற்கிடையே இயங்கும் மொழிபெயர்ப்பாளன், இவற்றில் கொண்ட பரிச்சயத்திற்கு ஏற்ப வெற்றி பெற முடியும்.

ஆசிரியர் : தங்கள் மொழியாக்கப் பணியில் மிகக் கடினமான பணி என்று எந்த நூலின் மொழியாக்க வேலையைச் சுட்டிக்காட்டுவீர்கள் ?

சா. தே. : எனக்குச் சிரமமாயிருந்தது, ராபர்ட் கீவெலின் *The Forgotten Empire*. சுமார் 400 ஆண்டுகளுக்கு முந்தையது விஜய நகரப்பேரரசு. தக்காணத்து சுல்தான்களுக்கும், அதற்குமிடையிலான மோதல் - முரணை விவரிப்பது. தெலுங்கும், கன்னடமும் பேசும் நிலப்பரப்பில் நடந்தது. வரலாறு, கட்டிடக்கலை, பிற கலைகள், மதத் தத்துவங்கள் சார்ந்தது. அதுவும் போர்ச்சுகல், ரஷ்யப் பயணிகளின் பதிவுகள் வரும் போது, கண்ணைக்காட்டி காட்டில் விட்டது போல இருக்கும். வெற்றிலை போடுதல் என்பதைச்சொல்ல போர்ச்சுகல் பயணிக்கு ஒரு பத்தி தேவைப்படும். நிலவியல் சார்ந்த விவரணங்கள் , சுல்தான்கள் பெயர்கள் எல்லாம் கரடுமுரடானவை.

ஆசிரியர் : தமிழில் ஆகச்சிறந்த மொழிபெயர்ப்பு, படைப்பு என்று எந்த நூலைச் சுட்டிக் காட்டுவீர்கள்?

சா. தே. : தமிழில் ஆகச்சிறந்த மொழிபெயர்ப்பு எனும் போது எனது வாசிப்பனுபவத்தில் திருலோக சீதாராமின் 'சித்தார்த்தா' மற்றும் ச. து. சு யோகியாரின் 'கடலும், கிழவனும்' என்பேன். ' சித்தார்த்தா' ஜெர்மன் மொழி நாவலாயினும், இந்தியாவின் ஆன்மீக – தத்துவத் தேடல்கள் சார்ந்தது. தனது மண்ணைப் பேசும் நாவல் என்பதாலேயே பெரிதும் உற்சாகத்துடன் திருலோகம் செய்துள்ளார். கவிஞராகவும், 'சிவாஜி' பத்திரிக்கையாசிரியராகவும், நல்ல பேச்சாளராகவும் அவர் விளங்கியது ஒரு கூடுதல் பலத்தை மொழிபெயர்ப்பில் தந்திருக்க வேண்டும்.

ச. து. சு. யோகியாரும் கவிஞராக இருந்தவர். திரைக்கதைகள் எழுதியவர். ஹெமிங்வேயின் நறுக்கான உரைநடையை உயிரோட்டத்துடன் தருவதுடன், உணர்ச்சி சுழிப்புகள் வருகையில், ஹெமிங்க்வேயை விடவும் ஆழமாக விவரித்துள்ளார்.

ஆசிரியர் : தமிழ் இலக்கிய வெளியில், மொழிபெயர்ப்பாளர்களுக்கு உரிய இடமும், மரியாதையும் தரப்பட்டுள்ளதா ? அல்லது அவர்கள் இரண்டாம் தர எழுத்தாளர்களாக நடத்தப்படுகிறார்களா ?

சா. தே. : மொழிபெயர்ப்பாளர்களுக்கு உரிய இடமும் மரியாதையும் பற்றி இருபது - முப்பது ஆண்டுகளுக்கு முன் சொல்வதானால், தமிழில் இருண்ட நிலை தான். ஆங்கிலம் உள்ளிட்ட பிற மொழிகளிலும் இதே நிலை தான். தன் பெயர் நூலின் அட்டையில் இடம் பெற, எடித் கிராஸ்மன் அவ்வளவு போராட வேண்டியிருந்தால், இங்கு சொல்லவே வேண்டியதில்லை.

இப்போது மொழிபெயர்ப்பை பொருட்படுத்திப் பேசுகின்றார்கள். இலக்கிய விமர்சனத்தில் / மதிப்புரையில் ஓரிரு வரிகளில் மொழிபெயர்ப்பாளன் குறிப்பிடப்படுகிறான். மொழிபெயர்ப்புக்கான விருதுகள் / பரிசுகள் பரவலாகி வருகின்றன. சிறந்த மொழிபெயர்ப்புக்கு 2 லட்சம் அளிக்கின்றது அருட்செல்வர் நா. மகாலிங்கம் மொழிபெயர்ப்பு மையம். மொழியாக்கத்திற்கென்றே 'திசை எட்டும்' காலாண்டிதழ் வருகின்றது.

ஆசிரியர் : ஒரு மொழியாக்கம் என்பது எப்போது வெற்றி அடைந்ததாகக் கொள்ளலாம் ? எப்போது தோற்றுப் போனதாகக் கொள்ளலாம் ?

சா. தே. : ஒரு மொழியாக்கம் வெற்றி பெறுவது, 90-95 % வரை சாதித்து விடும் போது. 100% என்பது லட்சியமே. அது எட்டப்படுவது அரிது. ஏனெனில், மொழியாக்கம் ஒரு பாதை தான். எனவே தான், ஒரு பிரதிக்கு பல மொழியாக்கங்கள் வருகின்றன. திருக்குறளுக்கு ஆங்கிலத்தில் மட்டும் 50 க்கும் மேற்பட்ட மொழிபெயர்ப்புகள் உள்ளன. ‘தோல்வியின் வரலாறே மொழிபெயர்ப்பு’ என்பார் ஈக்கோ.

அப்பா

-- **சக்தி மகேசுவரி, இராசபாளையம்.**

அப்பா இறந்து,
ஏழு நாட்கள் ஆகி,
காரியம் எல்லாம்
முடிந்தது.

பேசாத உறவுகள் கூட
வந்து போன சுவடுகள்.

எப்போதும் பம்பரமாய்ச்
சுற்றி வரும் அம்மா,
மூலையில் முடங்கித் தான் போனாள்.

நான் மட்டும்
அப்பாவின் நினைவுகளோடு.

எப்போதும் அப்பாவின் கையோடு
பிணைந்திருக்கும் மஞ்சப் பை, கேட்பாரற்று.

அப்பா படுத்திருந்த
கட்டில் நாதியற்று.

ஆடை மாட்டியில்
அப்பாவின் சட்டை உடலற்று.

சின்னக் குழந்தைபோல்,
என்ன வேண்டும் என
கடைக்கு ஓடும்
அப்பாவின் கால்களை எதிர்பார்த்து,
செருப்புகளும் காத்திருக்கின்றன.

'தாத்தா எங்கே?' என
வினவும் என் குழந்தையிடம்
'சாமி கிட்ட போய்ட்டார்' என்றேன்
வாஞ்சையோடு.

பாதையில் அப்பா நடந்து வருவதைப்
போல் பிரமை எனக்கு.

அப்பா என்னை அழைப்பது போல் அசரீரி.
திரும்பிப் பார்க்கிறேன்.

வீடெங்கும் ஊதுபத்தியின்
நறுமணத்தையும் தாண்டி, அப்பாவின் வாசம் !

பொன்னான பொழுதைத் திருடும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்....!

■ ஆல. தமிழ்ப்பித்தன், புனல்வேலி.



முக்கிய விடுமுறை தினங்களில், தொலைக்காட்சிகள், நமது தமிழ் கூறும் நல்லுலகிற்கு “சிறப்பு நிகழ்ச்சிகள்” என்ற பெயரில், கேளிக்கை நிகழ்ச்சிகளை விடாமல் ஒளிபரப்பி, நமது பொன்னான நேரத்தை திருடிக் கொள்கின்றன. தீபாவளி அல்லது பொங்கல் என்று சொன்னால் "பகுத்தறிவு" பாழாய்ப் போய் விடும் என்பதால், அந்த நாட்களை "விடுமுறை நாட்கள்" என்று குறிப்பிடும் தொலைக்காட்சிகள். அதாவது, இந்து மதம் தொடர்பான எதையும் பேசி விட்டால், "பகுத்தறிவுக்கு" அது பங்கமாகி விடும்.

ஓய்வு நாள், அல்லது பண்டிகை நாட்களில், நமது வீட்டில் செய்ய வேண்டிய எத்தனையோ பணிகள் இருக்கும். வீட்டை சுத்தப்படுத்துவது. வீட்டின் கொல்லைப்புறத் தோட்டத்தைப் பராமரிப்பது. குடும்ப நடப்புகளை அலசி ஆராய்வது, இதையெல்லாம் நாம் அன்று செய்யலாம்.

விட்டுப்போன பழைய நூல்களை எடுத்து வாசிக்கலாம், பத்திரிக்கைகளுக்கு ஏதாவது படைப்புகளை எழுதலாம். நாளிதழை, நன்கு முழுமையாக வாசிக்கலாம். குடும்ப நண்பர்களின் வீடுகளுக்குச் சென்று உறவாடுவது என்று எத்தனையோ பணிகளைச் செய்யலாம். இதையெல்லாம் விட்டு விட்டு ஒரு விடுமுறை நாளில், பல் கூட துலக்காமல், அந்த தொலைக்காட்சிப் பெட்டியின் முன்பு அமர்ந்து விட்டு, இரவில் அதை விட்டு எழுந்திருப்பது எத்தனை மோசமான நிலைமை ?!! நாம் சிந்திக்கவே நேரம் தராமல், இந்தக் கேளிக்கை நிகழ்ச்சிகள், நமது வாழ்வின் பொன்னான நேரத்தையே ஆக்கிரமித்துக் கொள்வது எத்தனை பெரிய மோசடி?!!

அந்த விடுமுறை நாள் நிகழ்ச்சிகள் யாவும், திரைப்படங்கள், அல்லது திரைப்பட நட்சத்திரங்கள் தொடர்பானதாக இருக்கின்றன. அப்படியானால், நமது முன்னேற்றத்துக்கு

என்ன தான் வழி ? இந்தப் பொழுது போக்கும் "முட்டாள் பெட்டியா" (Idiot box) நமது முன்னேற்றத்துக்கு துணை நிற்கப்போகிறது ? நமது ஓய்வு நாள் குறித்த சிந்தனை மாற வேண்டும். நம்மிடம் செய்யப் பணிகளா இல்லை? ஓய்வு நாள் என்பது வெறும் பொழுது போக்கும் நாள் என்ற சிந்தனையைத் தூக்கி எறிய வேண்டும். நம்முடைய குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அண்டை அயலாருடன் சேர்ந்து, நமது ஊருக்கு அருகில் உள்ள சுற்றுலாத்தலம் ஒன்றுக்குச் செல்லலாம். பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு கல்விச்சுற்றுலா செல்லலாம்.

ஞாயிற்றுக்கிழமை உண்ண, உறங்க மட்டுமல்ல. நாம் செய்ய வேண்டிய பணிகள் எத்தனையோ உள்ளன. நமது வீட்டின் பொருளாதார நிலைமையை மேம்படுத்த ஏதாவது செய்ய எண்ணலாம். ஓய்வு நாளில் சிறு தொழில் ஒன்றைச் செய்து பணம் சம்பாதித்து, அதை நமது வீட்டின் செலவுகளுக்குப் பயன்படுத்தலாம். சுய முன்னேற்றத்துக்காக அந்த நாளைச் செலவழிக்கலாம்.

பேசும் புத்தகங்கள்

-- **புனல்வேலி தமிழ்ப்பித்தன்**



ஓ, மானிட வர்க்கமே !
ஒரே ஒரு முறை
உன் செவி திறந்து
உரைக்கும் என்
உரை கேள்.
வாயில்லை எனக்கு.
ஆயினும் நான் பேசுவேன்.
காலில்லை எனக்கு
ஆனாலும் நான்
கால் வலிக்க நடப்பேன்.
உயிரில்லை எனக்கு.
ஆனாலும்,
உயிரற்ற உங்களுக்கு
உயிரூட்டுவேன்.
என்னைத் தொழுது வா
வேண்டிய வரம் தருவேன்.

என்னை நீ
உதாரணம் காட்டினால்
உயர்த்துவேன்.
உதாசீனம் ஆக்கினால்,
உதிர்ப்பேன்.
மகனாவதும்,
மகானாவதும் என்னை
பயன்படுத்துவதில்

நதிகளை உட்கொண்டதால்,
நாலா பக்கமும்
நான் மழையாய்,
நீயும் கடலைப்போல்.
என்னை உட்கொள்.
எட்டு திசையிலும்
கருத்து மழை பொழிவாய்.
என்னை
வாசித்துப் பார்க்குமுன்
யோசித்துப்பார்
மழலைப் பருவத்தில்
மண்-அவனாய் இருந்த உன்னை,
மாணவனாக்கி,
மன்னவனாக்கினேன்.

நீ
நோயாளியாய்ப் படுக்கையில்
நொந்து போய்க் கிடக்கையில்,
போராளியாக்கினேன்.
ஏமாளியாய்,
கோமாளியாய் இருந்த உன்னை,
ராசாளியாக்கினேன்.

என்
ஒரு பக்கத்தைப் புரட்டு.
உன்
மறுபக்கத்தை
நான் புரட்டுவேன்,
வெறும் மனிதனாயிருந்த உன்னை
பெரும் கவிஞனாக்குவேன்,
உன் நாக்கில் நானிருக்க,
என் போக்கில் நீயிரு.
நீங்கள் குடியிருந்தால்
தாயகம்.
நாங்கள் குடியிருந்தால்
நூலகம்.
மாணவனாய் என்னிடம் வா.
ஆசிரியனாக்குவேன்
வாசிப்பாளனாய் வா.

வையத்தில் நிரந்தர
வசிப்பாளனாக்குவேன்.
கரித்துண்டாக வா.
கற்பூரமாக்குவேன்.
காகிதமாய் வா.
காவியமாக்குவேன்.

மானிடனே,
மறந்து விடாதே 1
என்னைப் படிக்க நேரம் ஒதுக்கு.
சிதையல்ல நீ.
விதையெனக் காட்டுவேன்
என்னை நீ
புத்தகமாகப் பிரசவித்தாய்.
உன்னை நான்
புதையலாக பிரசவிப்பேன் !

****

-- ஆ. மு. சீனியம்மாள் நினைவாக ..
புனல்வேலி தமிழ்ப்பித்தன்

சிலையால் வந்த சிக்கல்களும்,

சித்தாந்தப் புரட்டல்களும்

-- ஸ்ரீவில்லிபுத்தூர் எஸ். ரமேஷ்.



சமீப நாட்களில் ஈ. வெ ரா. வின் சிலை குறித்த ஒரு சர்ச்சை, சமூக வெளியில் பரவலாக விவாதிக்கப்பட்டு வருகிறது. ஸ்ரீரங்கம் ஸ்ரீ அரங்கநாதப் பெருமாள் கோவிலின் வாசலில், தெற்கு கோபுரத்தருகே வைக்கப்பட்டுள்ள ஈ.வெ. ராமசாமியின் சிலையை, அகற்ற வேண்டும் என்று அப்பகுதி ஹிந்துக்கள் கோரிக்கை வைத்தனர். பா. ஜ கட்சியின் மாநிலத்தலைவர் கே. அண்ணாமலை, “பாரதிய ஜனதாவின் ஆட்சி தமிழ் நாட்டில் மலர்ந்ததும் முதல் வேலையாக அந்த ஈ. வெ. ராமசாமியின் சிலை அகற்றப்படும்” என்று உத்தரவாதம் அளித்தார். ஈ. வெ. ரா. வை இந்த தமிழ் நாட்டை விட்டு அகற்ற முடியாது என்று பெரியாரிஸ்டு சித்தாந்தவாதிகள் கூக்குரலிட்டுள்ளனர் . நல்லது. சித்தாந்த மோதல்களின் விளைவாக ஒரு தெளிவு பிறக்கக்கூடும். குழப்பம் நடந்தால் தான் தெளிவு பிறக்கும். குழம்பியவன் தெளிவடைவான். எனவே, இது குறித்த ஆய்வில் நாம் இறங்கினோம்.

ஈ. வெ. ரா. வின் வாழ்க்கை வரலாறு நீங்கள் யாவரும் அறிந்ததே.

பெரியார் என்று பரவலாக அறியப்படும் ஈ. வெ. இராமசாமி (இயற்பெயர்: ஈரோடு வெங்கடப்பா இராமசாமி, (1879 – 1973) சமூக சீர்திருத்தத்திற்காகவும், சாதியை அகற்றுவதற்காகவும் (?!) , மூடநம்பிக்கைகளை மக்களிடமிருந்து களைவதற்காகவும், பெண் விடுதலைக்காகவும் (?!!) போராடியவர். தமிழகத்தின் மிக முக்கியமான இயக்கமாகக் கருதப்படும் திராவிடர் கழகத்தினைத் தோற்றுவித்தவர். இவருடைய சுய மரியாதை (!?!) இயக்கமும், பகுத்தறிவு வாதமும் மிகவும் புகழ் பெற்றது. இவ்வாறு தமிழ் - விக்கிபீடியா, ஈ. வெ. ராமசாமியின் புகழ் பாடுகிறது.

இப்படிப்பட்ட ஒப்பிலாக் கீர்த்தி உடைய அன்னாரின் தத்துவ மூட்டையை கொஞ்சம் அவிழ்த்துப் பார்த்தோம். எங்களுக்கே தலைச்சுற்று, வாந்தி, பேதி, மயக்கம், அஜீரணம், இருதய வலி, தலைவலி, வயிற்று வலி, வாய்வுப் பிடிப்பு, பக்கவாதம், கீல் வாதம், ரத்தக்

கொதிப்பு எல்லாமே ஒரே நேரத்தில் வந்து விட்டது. ஈ. வெ.ராமசாமி, அவிழ்த்துக் கொட்டிய அற்புதமான 'கருத்துப் பெட்டகத்தை' தங்கள் முன்னே கொஞ்சம் திறந்து வைக்கிறோம்.

முன் எச்சரிக்கை : ஏற்கனவே, இருதய நோய் உள்ளவர்கள் தயவு செய்து இதைப் படிக்க வேண்டாம்.

'கணையாழி'க்கு ஈ. வெ. ரா. தந்த சிறப்புப் பேட்டி

கேள்வி : உங்கள் இயக்கத்தில் பயிற்சி பெற்றவர்களே ' ஒன்றே குலம் ; ஒருவனே தேவன்' என்று பேசுகிறார்களே ?

பதில் : அதை நான் கண்டிச்சேன். நீ என்னடா ஒஸ்தி ? 'ஒன்றே குலம் ; ஒருவனே தேவன்'னு நீ சொல்றே ! இன்னொருத்தன் ' ரெண்டே குலம் ; இரண்டே தேவன்'னு சொல்வான். உனக்கும், அவனுக்கும் என்ன வித்தியாசம் ? தேவன்னா, ஒண்ணு இருந்தால் என்ன ? இரண்டு இருந்தால் என்ன, ஆயிரம் இருந்தால் என்ன ?"

- 27-10-1972 அன்று 'கணையாழி'க்கு ஈ. வெ. ரா. தந்த சிறப்புப்பேட்டி

கணையாழி : பொருளாதார சமத்துவம் வந்தால், இந்த சாதி, மத உணர்வுகள் பெரும்பாலும் போய் விடாதா ?

ஈ. வெ..ரா : எங்கே போகுது ? கடவுள்ங்கற நம்பிக்கை இருக்கும் வரைக்கும் அந்தச் செல்வாக்கு இருக்கும். எங்க சாதியையே எடுத்துக்குங்க. நாங்க பலிஜா நாயுடு. பணக்காரனும் இருக்கிறோம். ஏழையும் இருக்கிறோம். பணக்காரனுக்கு சாதி உணர்ச்சி போச்சா ? பணம் இருக்க , இருக்க நாமம் பெரிசாகிட்டே போகுது.

"தமிழும், தமிழரும்" என்ற நூலில் ஈ. வெ. ராமசாமி கூறுகிறார். " தமிழ் மொழியை நான் ஒரு காட்டுமிராண்டி மொழி என்று சுமார் 40 ஆண்டுகளாக கூறி வருகிறேன். "தமிழ்ப்படித்த, தமிழின் புலவர்களான வித்துவான்கள், பெரிதும் 100-க்கு 99 பேருக்கு ஆங்கில வாசனையே இல்லாது வெறும் தமிழ் வித்துவான்களாக... தமிழ்ப்புலவர்களாக வெகு காலம் இருக்க நேர்ந்து விட்டதனால் அவர்களுக்கும் பகுத்தறிவுக்கும் வெகு தூரம் ஏற்பட்டதோடு அவர்கள் உலகம் அறியாத பாமரர்களாகவே இருக்க வேண்டியவர்களாக ஆகிவிட்டார்கள்.."

."தமிழை ஒதுக்கி விடுவதால், உனக்கு (தமிழர்) நட்டம் என்ன? வேறு மொழியை ஏற்றுக் கொள்வதால் உனக்கு பாதகம் என்ன? "புலவர்கள் (தமிழ் படித்துத் தமிழால் பிழைப்பவர்களுக்கு --

வயிற்றுப்பிழைப்புக்கு வேறு வழியில்லையே என்கிற காரணம் ஒன்றே ஒன்று அல்லாமல், தமிழர்கள் நல்வாழ்விற்கு தமிழ் எதற்கு ஆக வேண்டியிருக்கிறது?"

"தமிழும், தமிழரும்" என்ற நூலில் ஈ. வெ. ராமசாமி கூறுகிறார்.

இன்று, தமிழ் உலகில் தமிழ்ப்புலவர்களில் இரண்டு,மூன்று புலவர்களின் பெயர்கள் அடிபடுகின்றன. அவர்கள், 1 தொல்காப்பியன் 2 திருவள்ளுவன் 3. கம்பன்..

இம்மூவரில், 1 தொல்காப்பியன் ஆரியக்கூலி. ஆரிய தர்மத்தையே தமிழ் இலக்கணமாக செய்து விட்ட மாபெரும் துரோகி. 2 திருவள்ளுவன் அக்காலத்திற்கு ஏற்ற வகையில் ஆரியக்கருத்துக்கு ஆதரவு கொடுக்கும் அளவில் பகுத்தறிவைப்பற்றி கவலைப்படாமல், நீதி கூறும் முறையில் தனது மத உணர்ச்சியோடு ஏதோ கூறிச்சென்றான்...3 கம்பன், இன்றைய அரசியல்வாதிகள்-தேச பக்தர்கள் போல் அவர் படித்த தமிழ் அறிவை தமிழர் எதிரியாகிய பார்ப்பனருக்கு ஆதரவாய் பயன்படுத்தித் தமிழரை இழிவு படுத்தி, கூலி வாங்கி பிழைக்கும் மாபெரும் தமிழ்த் துரோகியே ஆவான். முழுப்பொய்யன். முழுப் பித்தலாட்டாக்காரன். தன்னைப் பார்ப்பானாகவே கருதிக்கொண்டு, பார்ப்பான் கூட சொல்லப் பயப்படும் கருத்துக்களை எல்லாம் கூறி, தமிழர்களை நிரந்தர கீழ்மக்களாக்கி விட்ட துரோகியாவான். இம்மூவர்களும் ஜாதியையும், ஜாதித்தொழிலையும், ஏற்றுக்கொண்டவர்கள் ஆவார்கள்."- **(மா.பொ.சி)**

ஈ. வெ. ராமசாமியின் இலக்கிய ஆராய்ச்சியின் முடிவு என்ன தெரியுமா?
"உண்மையாகப் பார்ப்போமானால், நமக்கு இலக்கியமே இல்லை. இலக்கியங்கள் என்று பாராட்டத்தகுந்த இலக்கியங்கள் இருக்கின்றன. நாம் பின்பற்றத்தகுந்த முறையில் நமக்குப் பயன்படுகிற முறையில் எந்த இலக்கியம் இருக்கிறது?" என்று கேட்கிறார் .

“நான், கல்லூரியில் ஆங்கிலத்தில் பாடம் சொல்லித்தர வேண்டும் என்றும்,மூன்றாம் வகுப்பிலிருந்து மாத்திரமல்லாமல், எழுத்தாணிப்பால் குடிக்க வைக்கும் போதே ஆங்கிலத்தில் துவைத்துக்கொடுக்க வேண்டும் என்றும் சொல்லுகிறேன்...” (**விடுதலை 18 -10 -1962**)

தமிழ் காட்டுமிராண்டி பாஷை

ஒரு பேட்டியில் ஈ. வெ. ராமசாமி. " தமிழைக்காட்டுமிராண்டி பாஷை என்று நீங்கள் குறிப்பிட்டீர்களே!" "ஆமாம், சொன்னேன்.என்ன தப்பு? ஒருத்தனோடு சண்டை போட்டுக்கிட்டுத் தமிழிலே திட்டறானே ..எப்படித்திட்டுறான்? சண்டைக்காரனை மட்டுமா திட்டறான்? அவன் அம்மா, அக்கா, பெண், பாட்டி, எல்லாரையும் தான் இழுக்கிறான். (சில நடைமுறை தமிழ் பாஷைகளை உதாரணத்துக்கு குறிப்பிடுகிறார்). அதே மாதிரி, சண்டை வந்து இங்கிலீஷ்லே திட்டினா, 'இடியட்' னு திட்டலாம். தமிழிலே திட்டற மாதிரி அவ்வளவு கேவலமா திட்டறதுண்டா? அதுவும், கிராமங்களிலே பெண் பிள்ளைங்க சண்டை போட்டுக்கிறதை கேட்டா நான் சொல்றது புரியும்...குழந்தைகளெல்லாம்

வீட்டிலேயே இங்கிலிஷ் பேச வேணும். அது நல்ல நாகரீகத்தையும் கொண்டு வரும் !...” -**'தினமலர்' – வார மலர், 25 -07 -1999**

கீழ வெண்மணிக்கொடுமை குறித்து ஈ. வெ. ரா . சொன்ன கருத்து :

"...இன்று வரை பெரியாரிஸ்டுகளால் கூட நியாயம் கற்பிக்க முடியாத ஒரு விஷயத்தை ஒரு முறை ஈ.வே. ரா. எழுதினார். தஞ்சை மாவட்டத்தின் கீழ வெண்மணி கிராமத்தில் 44 தாழ்த்தப்பட்டவர்கள் எரித்துக் கொல்லப்பட்டபோது, 'விடுதலை' (28 -12 -1968) இதழில், அந்தக் கொடுமையைச் செய்தவர்களைக் கண்டிக்கும் வாசகம் இல்லை. ' இந்த இழப்புக்குக்காரணம் கம்யூனிஸ்ட் கட்சி தான்,' என்று சொல்லி அத்துடன் முடித்து விட்டார்."

--“**துக்ளக்”-28-03-2018 ("பெரியார் மண்ணின் பேதமை" பக்கம் 34 -35)**

கம்யூனிஸ்டுகளின் வேலை :

"கம்யூனிஸ்ட் எவன் காலை நக்கியாவது வயிறு வளர்க்கறது தான் அவனது வேலை. இன்னின்னாரோடு தான் இருக்கணும் என்கிற எண்ணம் இல்லை. நாம் வலுத்தால் நம் கிட்டே. பார்ப்பான் வலுத்தால் அவன் கிட்டே. இன்னொருவன் வலுத்தால், அவன் கிட்டே. உலகத்தில் கொள்கையே இல்லாத ஒரு கூட்டம் என்றால் நம் கம்யூனிஸ்ட் தான். அதற்கு அடுத்தாற்போல், காங்கிரஸ்-- என்ன பண்ணியாவது பதவிக்கு வரணும் என்கிறவன்..இப்போது துவங்கின ஒரு கட்சி இருக்கிறது... அண்ணா முன்னேற்றக்கழகம் என்று இருக்கிறது. அவர்களுக்கு சொந்தத்தில் ஏதாவது வேலை இருக்கிறதா? அவர்கள் எதிரி கிட்டே பேசிக்கொண்டு, 'காலிகளை ஒழித்து விட்டு வருகிறேன். எனக்கு ஏதாவது எச்சல்கலை போடுகிறாயா?" என்று கேட்கிறார்கள்...

- **04-11-1973- ல், ஈ. வெ. ராமசாமி ஆற்றிய உரை.**

தமிழரின் செம்மொழி காப்பியம், சிலப்பதிகாரத்தைப்பற்றி ஈ. வெ. ராமசாமி சொன்னது :

மடத்தனம், புளுகு :"...இந்த சிலப்பதிகாரம் போல் வேறு அழுக்கு மூட்டை இலக்கியம் இல்லவே இல்லை. இது ஒரு கற்பனைக்கதை. கண்ணகியும், ஒரு கற்பனை பெண் பிள்ளை. நூல் முழுதும் மடத்தனம், புளுகு. இப்படியா தமிழனுடைய வாழ்க்கைக்கு உதாரணம் காட்டுவது?" -- **'விடுதலை' (28-03-1960)**

தமிழரின் செம்மொழி காப்பியம், சிலப்பதிகாரத்தைப்பற்றி ஈ. வெ. ராமசாமி சொன்னது:"

சிலப்பதிகாரம், தேவடியாள் மாதிரி : "...இந்த சிலப்பதிகாரம் எப்படி அமைந்திருக்கிறது என்றால், ஆபாச மூட நம்பிக்கை, ஆரிய கருத்துக்களைக் கொண்டு, நல்ல தமிழ் அமைப்பு உடையதாகக் கொண்டு, தேவடியாளுக்குச் சமமாக-- அதாவது, தேவடியாள் எப்படி பார்ப்பதற்கு அலங்காரமாய் இருப்பாளோ, ஆனால், உள்ளே போய் பார்த்தால், உள்ளமெல்லாம் வஞ்சகம் நிறைந்தும், உடலெல்லாம், நோய் கொண்டும், வளையல் அணியால் மக்களை ஏய்த்துப் பிழைப்பதாகக் காணப்படுகின்றாளோ- அது போலத்தான் இந்த சிலப்பதிகாரமும் ஆகும்."-**“விடுதலை' (28-07-1951)**

உயர்நீதிமன்றத்துக்கு ஈ. வெ. ராமசாமி விட்ட சாபம் :

' இன்று நமக்குப்பெரும் சனியனாக 'அய்க்கோர்ட்' ஒன்று இருக்கிறது. மற்ற எல்லா ஸ்தாபனங்களும், நமக்கு பெரிதும் அனுகூலமாக இருக்கின்றனவென்றே சொல்லலாம்." ....

---- '**விடுதலை' - 07-10-1972**

தமிழர் தந்தை சொன்னது

"ஆண் இரண்டு வைப்பாட்டிகளை வைத்துக்கொண்டால், பெண்கள் மூன்று ஆசை நாயகர்களை வைத்துக்கொள்ள முற்பட வேண்டும். உடனே, நிலைமை சரிப்பட்டுப்போகும். உண்மையான சமரசம் தோன்றி விடும். பிறகு கஷ்டமே இருக்காது.".

--.'தந்தை பெரியாரின் அறிவுரை'-100 என்ற நூலிலிருந்து.

இட ஒதுக்கீடு கூடாது : " ஜாதிக்கென்றோ, மதத்திற்கென்றோ எவ்விதச்சலுகையோ , உயர்வு தாழ்வு அந்தஸ்தோ, அவற்றிற்காக அரசாங்கத்திலிருந்து தனிப்பட்ட முறைகளைக்கையாளுவதோ, ஏதாவது பொருள் செலவிடுவது ஆகியவை கண்டிப்பாய் இருக்கக்கூடாது." --.**ஈ. வெ. ரா. ' நமது குறிக்கோள்'** என்ற நூலிலிருந்து.

" தமிழ் ஒரு காட்டுமிராண்டி பாஷை. தமிழில் படித்தால் முன்னேற முடியாது. அதனால்; தான் கன்னடத்துக்காரனாகிய நான் தமிழ் நாட்டில் தலைவனாக இருக்கிறேன்." --ஈ. வெ. ராமசாமி

"திருவள்ளுவன் அந்தக்காலத்துக்கு ஏற்ற வகையில், ஆரியக்கருத்துக்கு ஆதரவு கொடுக்கும் அளவில், பகுத்தறிவைப்பற்றி கவலைப்படாமல் , நீதி கூறும் முறையில், தனது மத உணர்ச்சியோடு ஏதோ கூறிச்சென்றான்..." திருவள்ளுவனைக்குறித்து ஈ.வெ. ராமசாமி சொன்ன கருத்து

"கற்பு என்பது பெண் அடிமை..." -- ஈ. வெ. ராமசாமி

"தமிழர்களுக்குத்தலைமை வகித்தது யார்? நான் கன்னடர். சர். பிட்டி தெலுங்கர்.. உங்களுக்குத் தலைமை தெரியாது." ஈ. வெ. ராமசாமி.

"திருவள்ளுவன் அந்தக்காலத்துக்கு ஏற்ற வகையில், ஆரியக்கருத்துக்கு ஆதரவு கொடுக்கும் அளவில், பகுத்தறிவைப்பற்றி கவலைப்படாமல் , நீதி கூறும் முறையில், தனது மத உணர்ச்சியோடு ஏதோ கூறிச்சென்றான்..." திருவள்ளுவனைக் குறித்து ஈ.வெ. ராமசாமி சொன்ன கருத்து

"...தொல்காப்பியன் ஒரு ஆரியக்கூலி... கம்பன் தமிழ் துரோகி, திருவள்ளுவர் மூட நம்பிக்கையைப் பரப்புவதற்காக எதையோ சொல்லி விட்டுப்போயிருக்கிறார்..திருக்குறளில், ஏதோ மொத்தமும் 30 குறள் தான் தேறும். புலவர்கள் எல்லாம் பொய்யர்கள்...."

--- ஈ. வெ. ராமசாமி

"தமிழ் காட்டுமிராண்டிக் காலத்து மொழி." –

(**பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள், II -ம் தொகுதி**)

"தமிழ் ஒரு நியூசென்சு , தமிழ்ப்புலவர்கள் (யாவரும்) குமுக எதிரிகள்."

(**நூல்: "தந்தை பெரியார்**," கவிஞர் கருணானந்தம்)

"தாய்ப்பாலை (தமிழை) எதற்காகப் படிக்க வேண்டும்? படித்த பிறகு அது எதற்குப் பயன்படுகிறது?"
"இன்றைய முற்போக்குக்கு முதல் எதிரி தாய்ப்பால் குடித்த மக்கள் தானே!" (**பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள், II -ம் தொகுதி**)

"ஆங்கிலமே தமிழரின் பேச்சு மொழியாக ஆகும்படியான காலம் ஏற்பட்டால், நான் மிக மிக மகிழ்ச்சியும் நிறைவும் அடைவேன் என்று பேசியிருக்கிறேன்."

"உங்கள் வீட்டில் மனைவியிடமும், குழந்தைகளுடனும் மட்டுமின்றி, வேலைக்காரிகளுடனும், ஆங்கிலத்திலேயே பேசுங்கள். பேசப்பழகுங்கள். பேச முயலுங்கள். தமிழ்ப்பைத்தியத்தை விட்டொழியுங்கள்." - (**பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள், II -ம் தொகுதி**)

"தெலுங்கு பேசும் மேல் சாதி நாயுடு, நாயக்க பெண்கள், சக்கிலி, டொம்பன், போயன் போன்ற தலித் சாதி ஆண்களிடமிருந்து தங்கள் கற்பை பாதுகாக்க வேண்டும். அவர்களிடம் அன்னம், தண்ணி பிழங்கக்கூடாது." -- ஈரோடு வெங்கடப்ப ராமசாமி - தெலுங்கர் இன எழுச்சி உரை (1911)

ஒரே புருஷன் என்ற கட்டாயம் கூடாது –

ஒருவனுக்கு ஒருத்தி என்ற எண்ணக் கோட்பாட்டை எதிர்த்து ஆணும் பெண்ணும் விலங்குகள் போல கலவி செய்து சமூகம் உறவுகள் என்ற நிலையறுந்து வாழும் நிலையைத் தூண்டல்.

…இந்தக் காதல் காரணத்தினாலேயே ஒரு புருஷன் ஒரே மனைவியுடனும், ஒரு மனைவி, ஒரே புருஷனுடனும் மாத்திரம் இருக்க வேண்டியதென்றும் கற்பித்து, அந்தப்படி கட்டாயப்படுத்தியும் வரப்படுகிறது. இதன் பலாபலன் எப்படியிருந்தாலும் இந்தப்படி சொல்கின்றவர்களை எல்லாம் உலகனுபவமும், மக்கள் தன்மையின் அனுபவ ஞானம் இல்லாதவர்கள் என்றோ, அல்லது இயற்கைத் தன்மையையும் உண்மையையும் அறியாதவர்கள் என்றோ, அல்லது உண்மை யறிந்தும் வேறு ஏதாவதொரு காரியத்திற்காக வேண்டி, வேண்டுமென்றே மறைக்கின்றவர்கள் என்றோ தான் கருத வேண்டியிருக்கிறது.

…இவையெல்லாம் ஒரு மனிதன் தனக்கு இஷ்டமான ஒரு ஓட்டலில் சாப்பிடுவது போலவும், தனக்குப் பிடித்த பலகாரக் கடையில் பலகாரம் வாங்குவது போலவும் அவனுடைய தனி இஷ்டத்தையும், மனோபாவத்தையும், திருப்தியையும் மாத்திரமே சேர்ந்ததென்றும், இவற்றுள் மற்றவர்கள் பிரவேசிப்பது அதிகப்பிரசங்கித்தனமும், அனாவசியமாய் ஆதிக்கம் செலுத்துவதுமாகும் என்று தான்

சொல்ல வேண்டும்.

"கர்ப்பப்பையை அகற்றுங்கள். கர்ப்பப்பை பெண் அடிமைத்தனத்தின் அடையாளம்."

--- ஈ.வெ.ராமசாமி

எல்லாவற்றையும் ஒழிக்கச்சொன்ன ஈ. வெ**. ராமசாமி** :

மக்களிடம் உணர்ச்சி ஒழுக்கம் ஏற்பட வேண்டுமானால், சினிமா ஒழிக்கப்பட வேண்டும். நீதி, நேர்மை ஏற்பட வேண்டுமானால், வக்கீல் முறை ஒழிக்கப்பட வேண்டும். நாட்டில் காலிகள், அயோக்கியர்கள் ஒழிக்கப்பட வேண்டுமானால், பத்திரிக்கைகள் ஒழிக்கப்பட வேண்டும். அரசியலில் நல்ல ஆட்சியும், நாணயமும் ஏற்பட வேண்டுமானால், தேர்தல் முறை ஒழிக்கப்பட வேண்டும்.

-- பெரியார் பிறந்த நாள் விழா மலர் --84 நாள் : 17-09-1962

கெட்ட நாற்றம் :

வள்ளுவர் குறளையும், அந்தப்படியே அப்போது பகுத்தறிவுக்கு ஏற்றதல்ல என்று கண்டித்து வந்தேன். எல்லாவற்றையும் குறை சொல்லும் போது, பலர் என்னிடம் ' எல்லாம் போய் விட்டால், நமக்கு எது தான் நூல்?' என்று கேட்பார்கள். நான் ' இங்கே இருக்கிற மலத்தினால் கெட்ட நாற்றம் வீசுகிறது. அதை எடுத்து விடு' என்று கூறினால், அந்த இடத்தில் என்ன வைப்பது என்றா கேட்பது ?' என்று பதில் கூறுவேன்.

--- 'விடுதலை' 11-06-1950

தமிழ் காட்டுமிராண்டி மொழி :

இந்த தமிழ் மொழியானது காட்டுமிராண்டி மொழி என்று நான் ஏன் சொல்கிறேன் ? எதனால் சொல்கிறேன்? என்று இன்று கோபித்துக்கொள்ளும் யோக்கியர்கள் ஒருவர் கூட சிந்தித்துப்பேசுவதில்லை. 'வாய் இருக்கிறது. எதையாவது பேசி வயிறை வளர்ப்போம்' என்பதைத்தவிர, அறிவையோ, மானத்தையோ ஒழுக்கத்தையோ பற்றி சிறிது கூட சிந்திக்காமலே பேசி வருகிறார்கள். இப்படிப்பட்ட இவர்கள் போக்குப்படியே சிந்தித்தால், தமிழ் மொழி 3000-4000 ஆண்டுகளுக்கு முந்தி ஏற்பட்ட மொழி என்பதை, தமிழின் பெருமைக்கு சாதனமாய்க்கொண்டு பேசுகிறார்கள். நானும் தமிழ் காட்டுமிராண்டி மொழி என்பதற்கு அதைத்தானே முக்கிய காரணமாய்ச்சொல்லுகிறேன்.

---''மெடீரியலிசம் அல்லது பிரகிருதிவாதம்' என்ற நூலிலிருந்து

கற்பு ஒழுக்கம் என்பது பூச்சாண்டி உலகில் கற்பு, காதல், என்பன போன்ற வார்த்தைகள் எப்படி பெண் மக்களை அடிமைப்படுத்தி அடக்கி ஆளவென்று v ஏற்படுத்தி பயன்படுத்தப்பட்டு வருகின்றனவோ, அது போலவே தான் ஒழுக்கம் என்னும் வார்த்தையும், இது எளியோரையும் பாமர மக்களையும்

ஏமாற்றி, மற்றவர்கள் வாழப்பயன்படுத்தி வரும் ஒரு சூழ்ச்சி ஆயுதமேயல்லாமல், அதில் உண்மையோ சத்தோ ஒன்றுமே கிடையாது.

---- ''மெடீரியலிசம் அல்லது பிரகிருதிவாதம்;' என்ற நூலிலிருந்து

"நமது நாட்டில் வேறு வழியில் பிழைக்க முடியாதவர்கள், தமிழின் பெயரால் பிழைக்கத்துடிக்கிறார்கள். அவர்கள், துடிதுடிப்புத்தான், ' தமிழைக்காக்க வேண்டும், தமிழுக்காக உழைப்பேன், தமிழுக்காக உயிரை விடுவேன்' என்பது போன்ற கூப்பாடுகள். இதில், மற்ற மக்கள் சிக்குண்டு ஏமாந்து போகக்கூடாது.." ---'விடுதலை' --16-02-1967

-- தந்தை பெரியார் அறிவுரை--100 என்ற நூலிலிருந்து

"தமிழ் எழுத்தும், தமிழ்ப்பேச்சும் ஒழியணும்." --ஈ. வெ. ராமசாமி

"தமிழும், தமிழரும்" என்ற நூலில் ஈ.வே. ராமசாமி நாயக்கர் கூறுகிறார். " தமிழ் மொழியை நான் ஒரு காட்டுமிராண்டி மொழி என்று சுமார் 40 ஆண்டுகளாக கூறி வருகிறேன். "தமிழ்ப்படித்த, தமிழின் புலவர்களான வித்துவான்கள், பெரிதும் 100-க்கு 99 பேருக்கு ஆங்கில வாசனையே இல்லாது வெறும் தமிழ் வித்துவான்களாக... தமிழ்ப்புலவர்களாக வெகு காலம் இருக்க நேர்ந்து விட்டதனால் அவர்களுக்கும் பகுத்தறிவுக்கும் வெகு தூரம் ஏற்பட்டதோடு அவர்கள் உலகம் அறியாத பாமரர்களாகவே இருக்க வேண்டியவர்களாக ஆகிவிட்டார்கள்.."

(அதாவது, தமிழ் படித்ததால்தான், பகுத்தறிவு இல்லாமல் போய்விட்டார்களாம். உலகம் அறியாதவர்களாகி விட்டார்களாம்.....நூலாசிரியர்..).

."தமிழை ஒதுக்கி விடுவதால், உனக்கு (தமிழர்) நட்டம் என்ன? வேறு மொழியை ஏற்றுக்கொள்வதால் உனக்கு பாதகம் என்ன? "புலவர்கள் (தமிழ் படித்துத்தமிழால் பிழைப்பவர்களுக்கு-- வயிற்றுப்பிழைப்புக்கு வேறு வழியில்லையே என்கிற காரணம் ஒன்றே ஒன்று அல்லாமல், தமிழர்கள் நல்வாழ்விற்கு தமிழ் எதற்கு ஆக வேண்டியிருக்கிறது?"

ஈ. வெ. ராமசாமி நாயக்கருடைய இலக்கிய ஆராய்ச்சியின் முடிவு என்ன தெரியுமா? "உண்மையாகப்பார்ப்போமானால், நமக்கு இலக்கியமே இல்லை. இலக்கியங்கள் என்று பாராட்டத்தகுந்த இலக்கியங்கள் இருக்கின்றன. நாம் பின்பற்றத்தகுந்த முறையில் நமக்குப் பயன்படுகிற முறையில் எந்த இலக்கியம் இருக்கிறது?" என்று கேட்கிறார்.

"ஆங்கிலமே தமிழரின் பேச்சு மொழியாக ஆகும்படியான காலம் ஏற்பட்டால், நான் மிக மிக மகிழ்ச்சியும் நிறைவும் அடைவேன் என்று பேசியிருக்கிறேன்."

"தமிழ் ஒரு நியூசென்சு , தமிழ்ப்புலவர்கள் (யாவரும்) குமுக எதிரிகள்."
(நூல்: "தந்தை பெரியார்," கவிஞர் கருணானந்தம்)

"தாய்ப்பாலை (தமிழை) எதற்காகப்படிக்க வேண்டும்? படித்த பிறகு அது எதற்குப் பயன்படுகிறது?".."இன்றைய முற்போக்குக்கு முதல் எதிரி தாய்ப்பால் குடித்த மக்கள் தானே!"

-- (பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள், II -ம் தொகுதி)

ஆகஸ்டு, 15, 1947 அன்று இந்தியா சுதந்திர நாடாக மலரும் என்று ஆங்கிலேய ஆட்சியாளர்கள் அறிவித்தனர். அப்போது, ஈ. வெ. ரா. ஒரு அறிக்கையை வெளியிட்டார்.

"ஆகஸ்டு, 15 -ந்தேதி , வட ஆரியர்களின் ஆதிக்கம் உதயமாகும் நாள்." அந்த நாள் திராவிடர்களுக்குத்துக்க நாள். எனவே, திராவிடர் கழகம் அந்த நாளைத்தடுக்க நாளாக அனுசரிக்கும்," என்று தெரிவித்தது அந்த அறிக்கை.

துக்க நாளாகக் கொண்டாட வேண்டும் என்பதை அண்ணாதுரை ஏற்றுக்கொள்ள வில்லை. இதனால், ஈ. வெ. ரா. விற்கும், அண்ணாதுரைக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

திராவிடர் கழகத்தில், இருந்து கொண்டே அண்ணாதுரை ஒத்துழையாமை செய்யத்துவங்கினார். "திராவிட நாடு" இதழில் கேள்வி --பதில் பகுதியில், " நீங்கள் திராவிடர் கழகத்திலிருந்து விலகிவிட்டீர்களா ?" என்ற கேள்விக்கு அண்ணாதுரை " விலகவில்லை. ஒதுங்கியிருக்கிறேன்," என்று பதில் எழுதினார். அண்ணாதுரை, நெடுஞ்செழியன், சம்பத் முதலியவர்கள் திராவிடர் கழக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதைத்தவிர்த்து வந்தனர். அண்ணாதுரை அரசியலுக்கே லாயக்கற்றவர் என்று காட்ட ஈ. வெ. ரா. முயன்றார். அந்நாட்களில், திராவிடர் கழக உறுப்பினர்கள் எல்லோரும் கருப்புச்சட்டை அணிய வேண்டும் என ஈ. வே. ரா. ஆணையிட்டிருந்தார். அண்ணாதுரை, நெடுஞ்செழியன் போன்றோர் கருப்புச்சட்டை போட மறுத்தார்கள்.

தமிழ்த்தாய் வாழ்த்து பாடுவது தவறு என்ற கருத்தைக் கொண்டவர் ஈ. வெ. ரா. தமிழ்த்தாயை வாழ்த்திப் பாடுவது, கடவுளை வாழ்த்திப் பாடுவதற்கு ஒப்பானது என்ற எண்ணம் கொண்டிருந்தார். 1971 -ம் ஆண்டு, முன்னாள் முதல்வர் மு. கருணாநிதி, மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை இயற்றிய "மனோன்மணியம்" என்ற நாடகத்தில் வரும் " தமிழ்த்தெய்வ வணக்கம்" என்ற வாழ்த்துப் பாடலை தமிழக அரசாங்கத்தின் பாடலாக வைத்துக்கொள்ள முடிவெடுத்தார். அந்தப் பாடலில், சில வரிகள் நீக்கம் செய்யப்பட்டன. அதன் பின்பு எஞ்சியவற்றை "தமிழ்த்தாய் வாழ்த்து" என்று அறிவித்தது அரசு. அதைக் கடுமையாக எதிர்த்தவர்கள் இருவர். ஒருவர் கவியரசு கண்ணதாசன். மற்றொருவர் ஈ. வெ. ராமசாமி. தன்னுடைய . "விடுதலை" இதழில் அரசாங்கத்தைக் கண்டித்து ஈ. வெ. ரா. எழுதிய கண்டன வரிகள் இதோ :

"நீ வாழ்த்துவதால் உன் தமிழ்த்தாய்க்கு ஒரு கொம்பு முளைத்து விடுமா ? கடவுள் வாழ்த்து வேண்டாம் என்றால், உடனே தமிழ்த்தாய் வாழ்த்து. ஒரு முட்டாள்தனத்துக்குப் பதில் இன்னொரு முட்டாள்தனமா? " -- "விடுதலை" இதழ் – 13- 4 -1972

ஆதாரம் :

ஏற்கனவே வெளி வந்து, விற்பனையில் சக்கை போடு போட்ட நூல் "**பெரியாரின் மறுபக்கம்**" . இந்நூலின் ஆசிரியர் ம. வெங்கடேசன் அவர்களுக்கு நன்றியோ நன்றி !!

இந்நூலை விலையில்லாமல் பதிவிறக்கம் செய்து வாசிக்க :
https://www.scribd.com/document/492332607/பெரியாரின-மறுபக-கம-ம-வெங-கடேசன

உலகப் புத்தக தினம்



இருட்டெழுத்துக்கள்

இருள் நீக்கி ஒளி காட்டும்,

அவைகள்

வெறும் எழுத்துக்களல்ல.

நம்மை மரமாக

பிரசவிக்கும் வித்துக்கள்.

வெள்ளை வானில்

வீதியுலா வரும்

வெண்ணிலாக்கள்.

பூட்டும், சாவியும்

இல்லையென

காட்டும் ஆபரண அரங்கம்.

எவ்வளவு பருகினாலும்

தீராது தாகம்.

அவ்வளவு சுவை !

அதனாலே அனைவரும்

அதைத்தட்டி எழுப்புவோம்.

எதனாலே ஏற்றம்

எனுமுணர்வை

எண்ணுவோம்.

வாசிக்கப் பழகுவோம்.

வாழ்க்கை வசமாகும்.

நேசிக்கத் தொடங்குவோம்.

நெஞ்சம் நிறைவாகும்.

புத்தகங்கள்

அடுக்கி அழகு பார்க்க,

அல்ல. அல்ல.

அது அறியாமை நீக்க.

ஆபத்திலிருந்து காக்க.

இன்பமுற,

ஈகை வளர,

உலகை வலம் வர,

ஊக்கம் பெற,

எழுத்தை உள் வாங்கி

ஏற்றம் பெற,

ஐயப்பாடு நீங்க,

ஒற்றுமை ஓங்கி வளர

ஔவை தமிழாலும்

அவையை அலங்கரிக்க.

-- புனல்வேலி தமிழ்ப்பித்தன்

வெள்ளைக்காரன் கட்டி வச்சான் பாலம்

நம்ம கொள்ளைக்காரன் கட்டி வச்சான் காணும்.

உள்ள நெலை இப்படித்தான் நாளும்.

சில உண்மைகளை சொல்ல வந்தேன் நானும்.

அவனவனும் அங்கங்கே கமிசன் கேக்குறான்.

அட போயானு சொன்னாக்க ஆளைத் தூக்குறான்.

எவனெவனோ வந்தென்ன பதவிக்கு.

ஏழைகட்கு வரவில்லையே உதவிக்கு.

வெலை கொடுத்து வாங்குகின்ற காலமாச்சுது.

வெளங்காம போறதுக்கே நாடும் ஆச்சுது.

கலங்காம இருக்க நம்மால் முடியவில்லையே.

கண்ணு கசங்காம நம்ம பொழுதும் விடியவில்லையே.

பணம் பறிக்கும் கொள்ளைக்கார நாடா போச்சுதே.

பலமுள்ளவன் அதிகாரத்தால் பாழா போச்சுதே.

பிணந்திண்ணிக் கழுகுகளே பெரும் பங்கு வகிக்குது, இதுல

பெருமை பேச என்னாங்கய்யா மிச்சம் இருக்குது ?!

-- புனல்வேலி தமிழ்ப்பித்தன்

(பல ஆண்டுகளுக்கு முன்னால் போராட்ட காலத்தில் சிறை வாசத்தின் போது எழுதிய வரிகள்.....இல்லை வலிகள்)

நேசத்தின் சுவாசம்

■ இராஜபாளையம் வெங்கடேஷ் ■



உன் இரும்பு அலமாரியில்,
அடுக்கி வைத்திருக்கும் சேலைகளின் எண்ணிக்கை,
என் நேசத்தின் அளவு என்கிறாய்.
"அந்த சேலைகளின் சூட்சுமம்" என்கிறேன் நான்.

உன்னை எத்தனை முறை காயப்படுத்தினாலும்,
மீண்டும் உன் நேச மடியிலேயே வீழ்கிறேன்.
மலரின் மது அருந்தி, அதனிலேயே வீழ்ந்து விடும்
வண்டினைப்போல.

நான் நினைப்பதை நீயே முடிவு செய்கிறாய்,
ஏனெனில் என்னுள் நீ.

அழகு சாதனப் பொருட்களில்
உன் அழகு உள்ளது என்கிறாய்.
கண்ணாடியைப் பார்த்தவாறு,
நானோ உன் அகத்தில் உள்ளது என்கிறேன்,
உன் உள்ளத்தைப் பார்த்தவாறு.

உன் ஒவ்வொரு குறுஞ்செய்தியிலும்,
அன்பை வெளிப்படுத்துகிறாய்.
நான் மௌனத்தில் உணர்த்துகிறேன்.
உனக்கு வார்த்தைகள் தேவைப்படுகிறது.
எனக்கு வாய்ப்புகள் தேவைப்படுகிறது.

யசோதரைக்குப் பிறகு யாரும் பிறக்கவில்லை
புத்தனைக் கொடுப்பதற்கு.

"என்னைமறப்பாயா?" என்று கேட்டஉன்னிடம்,
"உன்னை நான்பார்த்த முதல் எனை மறந்தேன்"

என்பதை எப்படிப் புரியவைப்பேன் ?

பெரிதாக ஒன்றும் தேவையில்லை,
உன் மடியில் இளைப்பாறச் சிறிது இடம் போதும்,
பெருஞ்சாரலாய்ப் பிடித்த மழையென,
போர்த்திக் கொள்வேன் உன்னை என் உள்ளத்தினுள்.

கண்ணயர்ந்த நேரத்தில் கண்ணி வைத்துப் பிடித்து விட்டாய்,
கணக்கிலடங்கா ஆசையினில் அல்லாடிய எனை,
நேசமிகு வார்த்தைகளால் வசீகரித்து,
பாசமான உன் பாசிசத்தால்,
பற்ற வைத்து, வைத்து விட்டாயே உன்னோடு.

நம்மிடையேயான வாக்குவாதத்தில்,
வெற்றி உன் வசமாக வேண்டுமென நானும்,
என் வசமாக வேண்டுமென நீயும்,
முயற்சிப்பதால்,
மௌனமாகவே முடிந்து விடுகிறது முடிவு.

நேசச் சிறையில் நான் உன்னை அடைக்க,
நீ என்னை அடைக்க,
இறுதியில் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது தீர்ப்பு,
தண்டனையாக என்னுள் நீயும்,
உன்னுள் நானும் இருக்க.

நான் கூறுவது பொய் எனத் தெரிந்தும்,
தலையாட்டும் உன்னிடம்,
தோற்று தான் போய் விடுகிறது,
என் கபடமும்.
****
"உன்னிடம் உள்ளதெல்லாம் தா!" என்கிறாய்.
என்ன தந்து விடுவேன் நான்?
என்னிடம் நீ மட்டுமே
நிறைந்திருக்கிறாய் என்பதைத் தவிர.

நிரப்பிக் கொள்கிறேன் உந்தன் நினைவுகளை,
நிசப்தங்களற்ற என் பொழுதுகளில்,
அவை கூட்டிச் செல்கின்றன பேரமைதி எனும் அற்புதத்திற்கு,
எனை அறியாமலே !

நீ துயருறும் போதெல்லாம்,
உன் தோளில் தட்டிக் கொடுக்கும்
என் கைகளில் உள்ளது நிவாரணி என்கிறாய்.
அது உன்னை ஆற்றுப்படுத்தும்
என் நேசச் சூத்திரம் என்கிறேன் நான்.

நாம் இருவரும் வெளியே கிளம்பும் போது,
அழகு சாதனப் பொருட்களுடன் நீ ஆர்ப்பரிக்கும் நிமிடங்கள்,
வெளியாட்களுக்கு முன்
என்னை உயர்த்திக் காண்பிக்கும் நிகழ்வுகள்,
என நான் அறிகிலேன்.
.
என் செல்லமே...!!
பெருஞ்சாரலாய் மாறிப்போனச் சிறு தூறல் போல,
உன் மீது கொண்ட சிறு சிறு ஆசைகள்,
வளர்ந்து பெரும் பசி கொண்ட நேச யானையாக,
பெருத்து நிற்கிறது.

நம்மிடையே நடக்கும் உரையாடல்களில்,
பெரும்பாலும் பகிரப்படுவது நேசம் தான்,
ஊடல் தான் நம்மிடையே உறவாட முடியாமல்
உறங்கிக் கொண்டுள்ளது.

****

குமரேசன் கிருஷ்ணன் தீட்டிய குறுங்கவிகள்



பார்த்தும்
பார்க்காமல்,
செல்கின்றனர்.
இப்போதெல்லாம்,
முகமூடிக்கு
வேலையில்லை.
என் முகத்தோடே
உலவுகிறேன்,
கூச்சமின்றி.

⍰

இந்த நீர் வீழ்ச்சி
விழுகிறதா ?
எழுகிறதா ?
காட்சிப்பிழைகள் தானே
வாழ்க்கை ?!

⍰

சட்டென
கடந்து விடுவேன்
திருநங்கையை.
கை தட்டி, "அண்ணா !"
என்றாள்.
ஒரு துளி நீர் தான்
தர முடியும்.
வேறென்ன தருவேன் ?

⍰
எப்போதும்
துயரம் கலைக்க,
ஒரு நடை நடப்பேன்.

நடக்கும்
அந்தப் பறவையைப் போல்.

?

இந்தப் பூவின்
பெயர் தெரியவில்லை.
ஆனாலும்,
இந்தக் காலையை
அது தான் மலர்த்துகிறது.

?

‘அப்பா’
என்கிறாள் நர்ஸ்.
எத்தனை
நிர்வாணங்களை
கடந்து வந்த குரலது ?

?

பனித்துளியும்,
நானும் ஒன்று தான்.
சட்டென உடைந்து விடுகிறோம்.

?

ஒற்றைப் பறவை
தனித்த மரமொன்றில்
அமர்கிறது.
தனிமையோடு
தனிமை பேசிக்கொள்ள,
காற்று
சற்று ஓய்வெடுக்கிறது.

?

எதுவும்
சொல்லாது
நிலை குத்தி அமரும்
இரகசியத்தை,
அப்பறவை தான்
மொழிந்தது.

?

வீடு வருகிறேன்.
வீடு தான்
வாழ்வின்,

வலி நிவாரணி.

• **திரு. குமரேசன் கிருஷ்ணன்**, சங்கரன் கோவில், மின்சார வாரியத்தில் பணிபுரிகிறார்.]

ஹைக்கூ கவிதைகள்

- "நீல நிலா" செண்பகராஜன்.



பேசாமல்
பேச வைக்கும்.
காதல்.

இறுதிச் சுற்றில்
தோற்றாலும்,
வெற்றி பெற்றது மரணம்.
.

பொய்மை வேடமிட்டாலும்,
உண்மையாகுமா ?
நரைப் பூச்சு.

பயணம் சுகமானது.
ஒத்தடம் கொடுத்த
இசை ஞானி இளையராஜா.

வெட்கப்பட்ட
வெட்கம்.
சேலை கட்டிய குழந்தை.

தேடல்

- "நீல நிலா" செண்பகராஜன்

தொலைந்ததைத் தேடுகிறேன்.
தேடித் தேடித்
தொலைகிறேன்.

தேடலில் தொலைந்த என்னை
யார் தேடுவார்கள் ?

தேடல் இல்லாத
வாழ்வில்
தொலைந்து போனால்,
தேடலே பயனற்றுப் போகும்.

நீங்களாவது தேடிச்
சொல்லுங்கள்.
தேடல் உள்ள
அர்த்தமுள்ள வாழ்க்கை
வாழும் மனிதர்களை…

Shakespeare's Desk

"ஷேக்ஸ்பியர்ஸ் டெஸ்க்" புத்தக நிறுவனத்தின் வெளியீடுகள்

1. கான்டெர்பரி கதைகள் –(மூலம் -- ஜெப்ரி சாஸர்) -- மொழிபெயர்ப்பு **ரூ. 100 -00**

2. முத்தா ---- (சிறுகதைகள்) -- **ரூ. 80-00**

3. எலியாவின் கட்டுரைகள் --(சார்லஸ் லாம்ப்) – (மொழிபெயர்ப்பு) **ரூ. 150 -00**

4. நகைச்சுவைக்கதைகள் --(ஆர். கே. நாராயண் , ஸ்டீபன் லீகாக்)
(மொழிபெயர்ப்பு) **ரூ. 150-00**

5. டைனோசர் ஆயிரம் சூழ வலஞ்செய்து ...(சிறுகதைகள்) **ரூ. 150 -00**

6. ஆண்டாளம்மா தேசம் (கட்டுரைகள்) ..... **ரூ. 150 - 00**

7 மோசஸ் மாணிக்கவாசகம் பிள்ளையவர்களின் ரெண்டு
புத்திரிகளின் மகாத்மியம்... (குறுநாவல்கள்) ..... **ரூ. 150 -00**

8. கதவு எண். 43, ரயில்வே பீடர் ரோடு --(சிறுகதைகள்)-- **ரூ. 150 – 00**

9. சில சுகமான நாட்கள் --(முழு நீள தமிழ்த்திரைக்கதை) -- **ரூ. 150 – 00**

10. Srivilliputtur : *Ruminations of a Rambler* (Essays) **– Rs.** 150-00

11. *Another Winter Evening and hot tea cups* (English verses) – **Rs.** 150-00

12. Nammazhwar *: The Saint and his Science (* A treatise on
Thiruvaimozhi) -- Available on www.amazon.in

13. *On the Substitution of the Roman for the Indian Characters*
by Rev. Dr Robert Caldwell Ed. S. Ramesh ... *on print*

14. *Narkarunai tyanamalai* **by** Rev. Dr Robert Caldwell, Ed. S. Ramesh
.... *on print*

15. *Records of the Early History of the Tinnevelly Mission, etc .*
by Rev. Dr Robert Caldwell Ed. S. Ramesh ... *on print*

16. 16 - முதல் 19 -ம் நூற்றாண்டு வரையிலான ஆங்கிலக்கவிதைகள் - (மொழிபெயர்ப்பு[ )

ரூ. 150 – 00

17. தவறான தமிழ்த்தாய் வாழ்த்து-- (கட்டுரைகள்) **உரூபா 150 – 00**

18. இலக்கிய நெறி :: விமர்சன நெறிமுறைகள்-

(பிளாட்டோ முதல் க்ளியாந்த் ப்ருக்ஸ் வரை) ***....*** ரூ. **150-00**

19. ***Lectures on the Tinnevelly Missions*** *– Descriptive of the Field, the Work and the Results & other rare works by Rev Dr Robert Caldwell (Reprint).* **Rs. 200-00**

20. கரிசனம் ---(சிறுகதைகள்) ரூ. **200 – 00**

21. **மொழிபெயர்ப்புக்கவிதைகள் –(எமிலி டிக்கின்சன், டி. எச். லாரன்ஸ்)** ரூ.**120 – 00**

22. இந்திய வரலாறு – பாகம் – 1 (பொய்யும் மெய்யும்) **Rs. 300-00**

புத்தகங்களின் தேவைக்கு தொடர்பு கொள்ள :

ஶ்ரீவில்லிபுத்தூர் எஸ். ரமேஷ்
"ஷேக்ஸ்பியர்ஸ் டெஸ்க்"
எண் 33 தெற்கு ரத வீதி
ஶ்ரீவில்லிபுத்தூர் அ. கு. 626 125
விருதுநகர் மாவட்டம். அலை பேசி : 90805 51905